
# அரங்கம் செய்திகள்

தமிழ் மக்களுக்கான ஒரு தொடர்பூடகம்

வார இதழ் – இலவசம் | வெள்ளி, மார்ச் 22 2019. இதழ் - 56








**டொயிலியின் டயரி: இலங்கையை ஆங்கிலேயர்களுக்கு பலியாக்கிய பிரதான சூத்திரதாரி**


பக்கம் - 04



**சுராங்கனிட்ட மாலு கெனாவா**

இலங்கையில் மாத்திரமன்றி, தமிழகத்திலும் பட்டி...

பக்கம் - 05



**கிழக்கில் தொடரும் தற்கொலைகளும் இளையோர் சமூகமும்**

இலங்கையில் கிழக்கு மாகாணம் திருகோணமலை,..

பக்கம் -07



**குடிநீரை பணம் கொடுத்து வாங்குவேன் என கனவிலும் நினைக்கவில்லை!**

பணம்கொடுத்து வாங்கும் நிலையை அடைந்திருக்கின்றேன்'...

பக்கம் - 06

## ஐநா ஆணையாளரின் அறிக்கையில் தமிழ் மக்கள் என்ற வார்த்தையில்லை. இலங்கையர் என்றே கூறப்பட்டுள்ளது

## ஆனால் அரசாங்கம் ஏற்க மறுப்பு

-நி.அமிர்தஸன்-

போர்க்குற்ற விசாரணையை நடத்த சர்வதேச நீதிபதிகளை உள்வாங்கும் வகையில் கலப்புமுறைப் பொறிமுறை உருவாக்கப்பட வேண்டும் எனவும் ஏற்கனவே வழங்கப்பட்ட வாக்குறுதிகளை தாமதிக்காமல் நிறைவேற்ற வேண்டும் எனவும் ஜெனிவாவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைச் சபையின் ஆணையாளர் மிச்செல் பச்சலெட் இலங்கை அரசாங்கத்திடம் கோரியுள்ளார்.

ஜெனீவா மனித உரிமைச் சபையின் கிளைக் காரியாலயம் ஒன்று கொழும்பில் அமைக்கப்பட வேண்டுமென்றும் ஆணையாளர் வலியுறுத்தியுள்ளார்.

ஐநா மனித உரிமைச் சபையின் அமர்வு இந்த மாதம் முதல் வாரத்தில் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. இலங்கை தொடர்பான பிரேரணை ஒன்றை பிரித்தானியா உள்ளிட்ட பல சர்வதேச நாடுகள் மனித உரிமைச் சபையின் அமர்வில் சமர்ப்பித்துள்ளன.

பிரேரணை குறித்து கடந்த இரண்டு நாட்களாக விவாதம் இடம்பெற்றது. இதன்போது இலங்கை குறித்த தனது கருத்தை வெளியிட்ட ஆணையாளர் மிச்செல் பச்சலெட் அரசாங்கத்தின் மீது காரசாரமான விமர்சனங்களை முன்வைத்தார். ஆனாலும் இலங்கை சார்பான அரச பிரதிநிதிகள் குழுவின் தலைவர் அமைச்சர் திலக் மாரப்பன ஆணையாளரின்




அறிக்கையில் கூறப்பட்டுள்ள விடயங்களை ஏற்க முடியாதெனக் கூறியுள்ளார்.

குறிப்பாக சர்வதேச நீதிபதிகள் அடங்கிய கலப்புப் பொறிமுறை ஒன்றை உருவாக்கி அதனடிப்படையில் போர்க்குற்ற விசாரணை நடத்துவதற்கான சட்ட ஏற்பாடுகள் இலங்கை அரசியல் யாப்பில் இல்லையென அமைச்சர் திலக் மாரப்பன கூறியுள்ளார்.

விதப்புரைகளின் பிரகாரம், கலப்புப் பொறிமுறை ஒன்றை உருவாக்குவதானால் சட்டத்தில் திருத்தங்கள் செய்யப்பட வேண்டும் எனவும் அதற்கு இலங்கை நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகள் பெறப்பட வேண்டும் என்றும் அவர் கூறினார்.

அத்துடன் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்றும் அமைச்சர் திலக் மாரப்பன தெரிவித்தார். ஆனாலும் அமர்வில் கலந்துகொண்ட பிரித்தானியா, கனடா

தொடர்ச்சி... (பக்கம் -15 )

## ஐ.நாவே எமக்கான நீதி எங்கே? மட்டக்களப்பில் ஓரணியில் திரண்ட மக்கள் எழுச்சி!




--- நிலவன் ---

கிழக்கு மாகாணத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடந்த கடையடைப்புப் போராட்டம் மற்றும் மட்டக்களப்பு நகரில் நடைபெற்ற காணாமல் போன உறவுகளுக்கான ஆர்ப்பாட்ட பேரணி ஆகியவற்றில் ஓரணியில் திரண்ட தமிழர்கள் ஐ.நா சபையை நோக்கி தங்களுக்கான நீதியை கோரி நிற்கின்றனர்.

மிகவும் எழுச்சி பூர்வமாக நடந்த மேற்படி ஆர்ப்பாட்ட பேரணியில் கட்சி பேதமின்றி அரசியல்வாதிகளும் சிவில் சமூக அமைப்புக்களும் மற்றும் வடகிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள், சமூக அமைப்புகள் என ஆயிரக்கணக்கானோர் கலந்துகொண்டு ஒரு எழுச்சியை ஏற்படுத்தியிருந்தனர்.

குறித்த ஆர்ப்பாட்ட பேரணியில் இலங்கை அரசாங்கத்தை குற்றம் சாட்டி ஐக்கியநாடுகள் மனித உரிமைகள் பேரவைக்கு அறிக்கை

தொடர்ச்சி... (பக்கம் -15 )

## தீவுகளில் காற்று மின் ஆலை அமைக்கத் திட்டம்

யாழ் தீவகப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பரீட்சார்த்த நடவடிக்கைகளின் வெற்றியை அடுத்து இலங்கையை சூழவுள்ள தீவுகள் மற்றும் தீவுப் பகுதிகளில் காற்று மின் ஆலைகள் அமைக்கப்படவுள்ளதாக சக்தி வலு அமைச்சரான ரவி கருணநாயக்கா கூறியுள்ளார்.

இலங்கையில் காற்று ஆலைகள் மூலமான மின் உற்பத்தியை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளை தாம் மேற்கொள்ளவதாகவும் அவர் கூறினார்.

தொடர்ச்சி... (பக்கம் -02 )




# 19 மார்ச்சில் கிழக்கை ஸ்தம்பிக்க வைத்தது ஏது?



இம் மாதம் 19ஆம் திகதி மட்டுநகரின் மத்தியில் கறுத்தப்பாலம் என மக்களால் அழைக்கப்படும் லேடிமனிங் பாலத்திலிருந்து காந்தி பூங்காவரை பெருந்திரளான மக்கள் பங்கேற்ற ஊர்வலம், பின்னர் காந்திப் பூங்காவில் நடைபெற்ற கூட்டம் ஆகியவை அனைவரையும் ஒரு தரம் திரும்பிப்பார்க்க வைத்தன.

பெண்கள், ஆண்கள், முதியோர், இளையோர் என மட்டக்களப்பு, அம்பாறை, மன்னார், திருகோணமலை போன்ற மாவட்டங்களிலிருந்து பல நூற்றுக் கணக்கானோர் இதில் பங்கு கொண்டனர். வலிந்து காணாமலாக்கப் பட்டோரின் உறவுகளின் சங்கமும் கிழக்குப் பல்கலைக்கழக மாணவ சமூகமும் தமிழ் இளைஞர் பேரவையும் சேர்ந்து இதனை ஏற்பாடு செய்திருந்தன.



நான்கு பிரதான கோரிக்கைகளை அவர்கள் வெளியிட்ட துண்டுப் பிரசுரம் கூறியது.

1. இலங்கைக்கு காலஅவகாசம் வழங்காதே.
2. ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக்கு இலங்கைத் தமிழரின் பிரச்சினையைக் கையளித்தல்.
3. சர்வதேச விசாரணை.
4. OMP – காணாமலாக்கப்பட்டோருக்கான அலுவலகம் தேவையில்லை; போன்றவை அவை.

கிராமத்திலிருந்து இளைஞர் யுவதிகளை மோட்டார் சைக்கிளில் வருமாறும் அத்துண்டுப் பிரசுரம் அழைப்பு விடுத்திருந்தது. கிழக்கிலும் வடக்கிலும் காணாமல் போன வலிந்து காணாமலாக்கப்பட்ட முஸ்லிம், தமிழர் சமூகம் உள்ளபோதிலும் தமிழர்களை, குறிப்பாகப் பெண்களைக் குறிவைத்து ஜெனிவா மனித உரிமைப் பேரவையில் இலங்கை பற்றிய விவாதம்

**செல்வி கார்க்கி**

நடைபெறுவதற்கு ஒரு நாள் முன்னர் (18 மார்ச்) இந்த மக்கள் திரள் கூட்டுதல் பல கேள்விகளை எழுப்புகிறது.

அத்துடன் பல்வேறு வகையான அரசியல் தலைவர்கள், கட்சிகள், அரசியல் அபிலாஷையுடைய தனிநபர்களும் இதில் பங்கேற்றனர். தமிழர் பேரவையின் தலைவர் சி. விக்னேஸ்வரன் முதல் நாளே மட்டக்களப்புக்கு வந்தார். மும்மதத் தலைவர்களிடமும் ஆசிபெற்றார். மக்கள் திரளின் நடுவில் காணப்பட்டார். தமிழர் தேசியக் கூட்டணியின் மிக

தொடர்ச்சி... (பக்கம் -11 )

## அரச திணைக்களங்களுக்கு மும்மொழிப் பெயர்ப்பலகைகள்



அரச கரும மொழிகள் அமுலாக்கல் செயற்திட்டம் 2019ன் கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தில் அரச திணைக்களங்களுக்கான மும்மொழிகளிலான பெயர்ப்பலகைகள் அரசாங்க அதிபரும் மாவட்டச் செயலாளருமான மாணிக்கம் உதயகுமாரால் வழங்கி வைக்கப்பட்டன.

தேசிய ஒருமைப்பாடு, அரச கரும மொழிகள், சமூக மேம்பாடு மற்றும் இந்து சமய விவகார அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் களுவாஞ்சிக்குடி, காத்தான்குடி, வாழைச்சேனை சாலைகள், கமநல சேவைகள் திணைக்களத்தின் மாவட்டத்திலுள்ள 17 அலுவலகங்கள், 5 நீதி மன்றங்கள், வீதி அபிவிருத்தித்திணைக்களம் ஆகியவற்றுக்கான மும்மொழிப் பெயர்ப்பலகைகள் இதன்போது வழங்கிவைக்கப்பட்டன.


தொடர்ச்சி...

## தீவுகளில் காற்று மின் ஆலை அமைக்கத் திட்டம்

இது நாட்டில் மின் உற்பத்திச் செலவைக் குறைக்க உதவும் என்றும் அவர் கூறியுள்ளார்.

மின் உற்பத்தியில் இருக்கக்கூடிய பிரச்சினைகளை அடையாளம் கண்டு மீள்சுழற்சி எரிபொருள் உற்பத்திக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும் என்று அவர் கூறியுள்ளார்.

## இத்தாலியில் எரிக்கப்பட்ட குழந்தைகளின் பஸ்



இத்தாலியில் மிலன் நகர் அருகே 51 பள்ளிக்குழந்தைகளை ஏற்றிச் சென்ற பேருந்து ஒன்று, அதன் ஓட்டுநரால் கடத்தப்பட்டது. பின்னர் அந்த ஓட்டுநர் பேருந்துக்கு தீ வைத்துள்ளார்.

பேருந்தில் உள்ள சில குழந்தைகள் அவர்களின் இருக்கையோடு கட்டி வைக்கப்பட்டிருந்த நிலையில், பேருந்தின் பின்புறம் இருந்த கண்ணாடிகள் உடைக்கப்பட்டு அவர்கள் மீட்கப்பட்டனர்.

இத்தாலி குடியுரிமை பெற்ற 47 வயதான அந்த ஓட்டுநர் கைது செய்யப்பட்டுள்ளார். இவர் செனகலை பூர்விகமாக கொண்டவர் ஆவார்.

"யாரும் இதில் பிழைக்க வாய்ப்பில்லை" என்று அந்த ஓட்டுநர் சொன்னதாக கூறப்படுகிறது.

"குழந்தைகள் அனைவரும் உயிர் தப்பியது ஒரு அதிசயம். இது ஒரு படுகொலையாக ஆகியிருக்கக்கூடும்" என்று மிலன் தலைமை வழக்கறிஞர் பிரான்சுஸ்கோ கிரேகோ கூறியதாக மேற்கோள் காட்டப்படுகிறது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் இத்தாலியின் குடியேறிகள் தொடர்பான கொள்கை மற்றும் மத்தியதரைக்கடல் பகுதியில் நிகழும் குடியேறிகள் மரணம் தொடர்பாக தனது சினத்தை வெளிப்படுத்தியதாக இந்த பேருந்தில் பயணித்த ஒரு ஆசிரியர் கூறியுள்ளார்.

"கைது செய்யப்பட்ட நபர், 'மத்தியதரைக்கடல் பகுதியில் நிகழும் மரணங்களை தடுத்து நிறுத்துங்கள், நான் ஒரு படுகொலையை நிகழ்த்த போகிறேன் என்று குரல் எழுப்பினார்'' என போலீஸ்துறை செய்திதொடர்பாளரான மார்கோ பல்மெய்ரி தெரிவித்தார்.

--- நன்றி பிபிசி

## 'கொழும்பில் 80 வீதமான கட்டுமானத் தொழிலாளர்கள் போதை மருந்துக்கு அடிமை'

கொழும்பில் கட்டுமானப் பணிகளில் ஈடுபடும் சுமார் 80 வீதமான தொழிலாளர்கள் போதை மருந்துக்கு அடிமையானவர்கள் என்று போதை மருந்துக் கட்டுப்பாட்டுக்கான ஜனாதிபதி செயலணிக்குழுவின் இயக்குனர் டாக்டர் சமந்தா கித்தலகம தெரிவித்துள்ளார்.

கொழும்பில் உள்ள பல்வேறுபட்ட கட்டுமானத்தளங்களில் பத்தாயிரம் பேர்வரை பணியாற்றுவதாகவும் அவர்களில் சுமார் 1000 வெளிநாட்டவரும் அடங்குவதாகவும் அவர் குறிப்பிட்டார். அவர்களில் 80 வீதமானோர் போதை மருந்துக்கு அடிமையாகியுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார். உளவுப் பிரிவுகளால் அண்மையில் நடத்தப்பட்ட ஆய்வில் இந்த தகவல் தெரிய வந்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

போதை மருந்துப் பழக்கத்தை பரப்பும் குழுக்களில் கட்டுமானத் தொழிலாளர்களும் அடங்குவதாகவும் டாக்டர் கித்தலகம கூறியுள்ளார்.

## திருகோணமலை பத்திரகாளி அம்மன் உற்சவம்



(கதிரவன் திருகோணமலை)

திருகோணமலை அருள்மிகு பத்திரகாளி அம்பாள் ஆலய வருடாந்த மகோற்சவம் திங்கட்கிழமை 2019.03.11 கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

வியாழக்கிழமை 2019.03.21 காலை

தொடர்ச்சி... (பக்கம் -13 )

இறுதி அஞ்சலி
திரு. வைரமுத்து வரதகுமார்
24-03-19 ஞாயிறு காலை நடைபெறவுள்ளது

1949 2019



Varadakumar Funeral Details
24th Sunday 24/3/2019

7.00 am to 10.00 am
Hindu Rituals at
Richard chalenor school
Manor Drive North
Newmalden
KT3 5PE

10.45 am to 11.15 am
Cremation
Putney Vale cemetery
SYAG LANE, WIMBLEDON,
LONDON SW15 3DZ





# பட்டறிவு

## டொயிலியின் டயரி: இலங்கையை ஆங்கிலேயர்களுக்கு பலியாக்கிய பிரதான சூத்திரதாரி

**என்.சரவணன்**

காலனித்துவ இலங்கையை ஆராய்பவர்கள் ஜோன் டொய்லியின் நாட்குறிப்புகளையும் அவரின் நூல்களையும் தவிர்த்துவிட்டு ஆராய்வதில் பயனில்லை.

பிரித்தானியர் கண்டியைக் கைப்பற்றுவதில் தொடர் தோல்விகளைத் சந்தித்துக்கொண்டிருந்த போதுதான் டொயிலி இலங்கை வந்து சேர்ந்தார்.

நெப்போலியன் போனபர்ட்டை இறுதியில் தோற்கடித்த 6ஆவது ரெஜிமென்ட் கண்டி மன்னனுடனான போரில் மண் கவ்வியது. சிலர் மட்டும் தான் உயிர் மீண்டு திரும்பினார்கள். போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் மட்டுமன்றி ஆங்கிலேயரும் கண்டியை போரின் மூலம் தோற்கடிக்கமுடியாது தவித்தனர். அதன் பின்னர் கண்டியைக் கைப்பற்றுவதற்கான முயற்சியில் பேரழிவின்றி சாணக்கியத்துடன் கைப்பற்றியது டொயிலியின் திட்டத்தால்தான்.

இலங்கையின் கரையோரங்களை மட்டும் அப்போது கைப்பற்றியிருந்த ஆகிலேயர்களின் முதலாவது தேசாதிபதியாக இருந்த பிரெடெரிக் நோர்த்தின் (Frederick North) காலத்தில் ஆங்கில அரச அதிகாரியாக கடமையேற்று 1801இல் இலங்கை வந்தார். முதலில் அவர் மாத்தறை பகுதிக்கான வரி அறவிடும் பணிக்கு அமர்த்தப்பட்டிருந்தார். அதன் பின்னர் காலியிலும் அந்தப் பணிக்கு நியமிக்கப்பட்டிருந்தார். இந்தக் காலப்பகுதியில் அந்தப் பகுதிகளில் நீதித்துறை அதிகாரமும் அவருக்கு இருந்தது.

டொய்லி அரச சேவையில் சிங்களம் கற்றிருக்கவேண்டியதன் நிபந்தனையை ஏற்று சிங்களம் மட்டுமன்றி பாளி மொழியையும் கற்று, பிற்காலத்தில் சிங்களத்தில் கவிதை எழுதுமளவுக்கு தேர்ச்சி பெற்றார். 1805 ஆம் ஆண்டு அவர் பிரதான மொழிபெயர்ப்பாளராக பதவி உயர்வு பெற்று கொழும்பு அரசாங்க அதிபராகவும் பணியாற்றி பின்னர் கண்டிக்கு மாற்றலாகும் வரையான காலப்பகுதிக்குள் இலங்கையின் உள்ளூர் மொழியில் பாண்டித்தியம் பெற்றிருந்தார்.

இலங்கையின் 2வது தேசதிபதியான தோமஸ் மெயிற்லண்ட் (Sir Thomas Maitland, 1759–1824) தான் முதலில் டொய்லியை ராஜதந்திர பணிகளில் ஈடுபடுத்தத் தொடங்கியவர். பிரித்தானியர் கண்டியிடம் கண்ட தோல்வி காரணமாக இனி கண்டியுடன் யுத்தத்துக்கு போவதை விட ஒரு ஒப்பந்தத்தை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளும்படி அரசரிடமிருந்து ஆணை பிறப்பிக்கப்பட்டிருந்தது.

பிரித்தானியரின் நடவடிக்கைகள் அதுவரை “முதலி”, “மகாமுதலி” போன்றோரால் தான் சாத்தியப்பட்டன. ஆனால் மெயிட்லன்ட் இவர்களை நம்பவில்லை. தனது நம்பிக்கைக்குரிய சிறந்த ராஜதந்திரியாகவும், அறிவாளியாகவும், உள்ளூர் மொழியையும் இயல்பையும் அறிந்த ஒருவரைக் கண்டு பிடித்தார். அவர் தான் டொயிலி.

கண்டியைக் கைப்பற்ற அமைத்த இரகசிய வியூகம்



1811இல் 3வது தேசாதிபதியாக சேர் ரொபர்ட் பிரவுன்றிக் (Robert Brownrigg) வந்து சேர்ந்தார். பிரவுன்றிக் உளவுச் சேவைக்கு டொய்லியை அமர்த்தினார்.

டொய்லி ஒரு சிறந்த சாணக்கியனும், தேர்ந்த உளவாளியும், ராஜதந்திரியும் என்று கூறலாம். கண்டியரசனின் முடிவுக்கு பின்புலத்தில் இயங்கிய சூத்திரதாரி ஜோன் டொய்லி. டொய்லிக்கு வழங்கப்பட்ட பணிகளின் பட்டியல் நீண்டது. அவை அனைத்துமே கண்டியை சூழ்ச்சியின் மூலம் கைப்பற்றுவதற்கான வழிவகைகளைக் கொண்டவை.

அரசரின் முக்கிய முடிவுகள் பல அவர் எடுக்குமுன்னமே டொய்லிக்கு தெரிந்திருந்தன. அல்லது ஊகிக்க முடிந்தன. அந்தளவுக்கு டொய்லியின் உளவாளிகள் கச்சிதமாக வழிநடத்தப்பட்டார்கள். அப்பேர்ப்பட்ட உளவாளிகளோடு நிகழ்ந்த உரையாடல்கள்கூட டொய்லியின் நாட் குறிப்பில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

### டொய்லியின் நாட்குறிப்பு

டொய்லி தனது அனுபவங்களை பின்னர் எழுதினார். அந்த டயரி சரியாக கண்டி கைப்பற்றப்பட்டு 100வருடங்களில் 1915 ஆம் ஆண்டு “டொய்லியின் நாட்குறிப்பை” (Diary of Mr. John D'Oyly) “இலங்கை றோயல் ஆசிய கழகம்” (Royal Asiatic Society - Ceylon) தீர்மானித்து 1917ஆம் ஆண்டு விசேட வெளியீடாக வெளியிட்டது. துரதிர்ஷ்டவசமாக இது இன்னமும் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டதில்லை, ஆனால் வெவ்வேறு நபர்களால் மொழிபெயர்க்கப்பட்ட சிங்களப் பிரதிகளை காண முடிகிறது. அவை பல பதிப்புகளையும் கண்டுவிட்டன.

அதில் விரிவாக கண்டியில் நடந்த கதைகள் அனைத்தும் எழுதப்பட்டிருக்கின்றன. டொய்லி எழுதிய “மலைநாட்டு அரசாட்சி பற்றிய குறிப்புகள்” (A Sketch of The Constituton of The Kandyan Kingdom) என்கிற நூலும் முக்கியத்துவம் வாய்ந்தது. இந்த நூல் சிங்களத்தில் மொழிபெயர்க்கப்பட்டு மறுபடியும் மறுபடியும் வெளியிடப்பட்டிருக்கிறது. கண்டி ராஜ்ஜியத்தைக் கைப்பற்ற கையாண்ட சூட்சுமங்களைப் பற்றி நேரடியாக குறிப்பிடாத போதும் அதற்கான சூழலையும் வாய்ப்புகளையும் உருவாக்கிய விதம் குறித்து பல விபரங்கள் உள்ளன.

கண்டி ராஜ்ஜியத்தின் அரசாட்சி,



பொருளாதாரம், சுற்றுச் சூழல், மன்னர், நீதி வழங்கல், வாழ்க்கைமுறை, பண்பாடு, சாதியம் போன்ற விபரங்களை மிகத் துல்லியமான பல தகவல்களை அவர் தனது நூல்களில் எழுதியிருக்கிறார். அவை ஒரு மிகப் பெரும் ஆதாரமாக பல எழுத்தாளர்கள், ஆய்வாளர்கள் இன்று வரை கையாண்டு வருகிறார்கள். சிங்களம் உள்ளிட்ட பல மொழிகளிலும் அது மொழியாக்கம் செய்யப்பட்டிருக்கிறது. இந்த நூல்கள் இலங்கையின் வரலாற்றில் முக்கிய நூல்களாக கருதப்படுகின்றன.

பலராலும் பயன்படுத்தப்படும் “சிங்கள சமூக அமைப்புமுறை” (Sinhalese Social Organization: The Kandyan Period. RALPH PIERIS) என்கிற முக்கிய ஆய்வு நூலை எழுதிய ருல்ப் பீரிஸ் அந்த நூலில் கையாண்ட அதிகமான ஆதாரங்கள் டொய்லியின் நூலில் இருந்து தான் பெறப்பட்டுள்ளது.

கண்டியில் புத்த பிக்கு வேடத்திலும், பிச்சைக்காரர் வேடத்திலும் பல ஒற்றர்களை வழிநடத்தியவர். கண்டி பிரதானிகளுடன் சதித் திட்டங்களை தீட்டிக்கொண்டே இருந்ததுடன் எஹெலபொல, பிலிமத்தலாவ போன்றோருடன் தொடர்புகளை பேணிக்கொண்டு இருந்தவர். தனது தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள பல பரிசுப் பொருட்களை பலருக்கும் வழங்கினார்.

குறிப்பாக கொழும்பிலிருந்து கண்டி பிரதானிகளுக்கு கொண்டு செல்லப்பட்ட குடிவகைகளைப் பற்றியும் அவரது நாட்குறிப்பில் தகவல்கள் உள்ளன. தொப்பிகள், உடைகள், புறாக்கள், விசித்திர பொருட்கள் என அனுப்பப்பட்டுள்ளன. தனக்கு ரகசிய தகவல் வழங்கிய பிக்குமார்களும் இப்படியான பரிசுப் பொருட்களை வழங்கியிருக்கிறார். மன்னர் ஸ்ரீ விக்கிரமசிங்கவுக்கு கொஞ்சம் கொஞ்சமாக குடிப்பழக்கத்தை ஏற்படுத்தி சாணக்கியமற்ற முடிவுகளை எடுக்கப்பன்னினார். எஹெலபொல, மொல்லிகொட ஆகியோருக்கு இடையில் இருந்த பிணக்கை சாதகமாக ஆக்கிக்கொண்டு அந்த பிணக்கை அரசவைக்குள் பெரும் பிரச்சினைகளின் தோற்றுவாயாக ஆக்கி கண்டியைக் கைப்பற்றி முடிக்கும்வரை கொண்டு சென்றார் டொய்லி. ஒரு கட்டத்தில் டொய்லியின் உளவாளிகள் என்று சதேகிக்கப்பட்டவர்கள் மன்னரால் கடும் தண்டனைகளுக்கும் உள்ளாக்கப்பட்டிருக்கிறார்கள்.

### சமரின்றி வீழ்ந்தது கண்டி

மன்னர் ஸ்ரீ விக்கிரமசிங்கனின் ஆட்சியை நன்றாக பலவீனப்படுத்தியதன் பின்னர் தகுந்த சந்தர்ப்பத்தில் பார்த்து எஹெலபொல வழங்கிய இரகசிய தகவல்களைக் கொண்டு இறுதி ஆக்கிரமிப்பு நிகழ்ந்தது. கண்டியில் தமது அணிகள் தயார் நிலையில் இருப்பதாகவும் தமக்கான ஆயுதங்களை கிடைக்கச் செய்யும்படியும் டொய்லிக்கு எஹெலபொல தகவல் அனுப்பியிருக்கிறார்.

கொழும்பு, காலி, திருகோணமலை, மட்டக்களப்பு, நீர்கொழும்பு பகுதிகளிலிருந்து 8 இராணுவப் பிரிவுகள் கண்டியை நெருங்கிக் கொண்டிருந்த வேளை மன்னர் ஸ்ரீ விக்கிரமசிங்கனின் படை பலவீனமடைந்திருந்தது. அவர் கண்டியைக் கைவிட்டு தலைமறைவானார். 1815 பெப்ரவரி மாதம் எந்தவித மோதலுமின்றி கண்டியை கைப்பற்ற ஆங்கிலேயர்களால் முடிந்தது.

தலைமறைவான மன்னரைப் பற்றி கிடைத்த உளவுத் தகவலைக் கொண்டு மன்னரைப் பிடித்ததும் டொய்லி தலைமையிலான படைதான்.


இலங்கையை ஒட்டுமொத்தமாக தாரைவார்க்கும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கண்டி ஒப்பந்தம் 02.03.1815 இல் செய்துகொள்ளப்பட்டது. அவ் ஒப்பந்தத்தின் சிங்களப் பிரதியை தயார் செய்ததும் டொய்லி தான். அந்த ஒப்பந்தத்தில் ஆங்கிலேயர்கள் சார்பில் கையெழுத்திட்ட மூவரில் ஒருவர் டொய்லி.

மன்னரையும் மன்னர் குடும்பத்தினரையும் கொழும்புக்கு பத்திரமாக அனுப்பிவைத்து வீட்டுக் காவலில் வைத்திருந்தார் டொய்லி. மன்னரின் பொக்கிசங்களைப் பற்றிய தகவல்களை மன்னரிடம் இருந்து கேட்டுப் பெற்றுக்கொண்டார்.

மன்னர் ஸ்ரீ விக்கிரசிங்கனை அடிக்கடி சந்தித்து அவரின் தேவைகளை நிறைவேற்றுவதிலிருந்து இந்தியாவில் வேலூருக்கு குடும்பத்துடன் நாடு கடத்தும் வரையான அத்தனையையும் மேற்கொண்டதும் டொய்லி தான்.

### இலங்கையில் இறந்த டொய்லி

25.05.1824 அன்று டொய்லி காய்ச்சலால் மரணமாகும்போது அவருக்கு வயது 49. இறுதி வரை அவர் திருமணம் செய்துகொள்ளவில்லை. கண்டி கெரிசன் மயானத்தில் அவர் நல்லடக்கம் செய்யப்பட்டார். இலங்கையில் மரணமான ஆங்கிலேயர்களுக்காக கண்டியில் அமைக்கப்பட்டது தான் கெரிசன் (Garrison cemetery) மயானம்.



DIARY OF MR. JOHN D'OYLY.

கண்டி தலதா மாளிகைக்கு பின்னால் அமைந்துள்ள நூதனசாலையின் வாயிலில் உள்ள ஜோன் டொய்லியின் சிலை.

டொய்லியின் மாபெரும் சேவைக்காக பிரித்தானிய சாம்ராஜ்ஜியத்தின் அரச விருதான “நைட்” பெயரும் அவருக்கு வழங்கப்பட்டது. ஒரு நாட்டைக் கைப்பற்றுவதற்கான சிறந்த நடைமுறை தந்திரோபாயங்கள் எவை என்பது பற்றிய வேலைத்திட்டத்தை மேற்குலகுக்கு கற்றுக்கொடுத்தவர் டொய்லி. நவகாலனித்துவத்தின் நவீன தந்திரோபாயத்தை போதித்த முக்கியமானவர் டொய்லி என்பார்கள்.

இலங்கையின் வரலாற்றில் டொய்லி ஒரு நயவஞ்சகன். ஆங்கிலேயர்களுக்கோ அதிக இரத்தம் சிந்தாமல் இலங்கையைக் கைப்பற்ற காரணமாக இருந்த சாணக்கியன்.

# டானிஸ் தேசாந்திரியின் பயணக் குறிப்பில் கிழக்கிலங்கை

அட்மிரல் ஒவே கெய்தே (Ove Gjedde) இந்தப் பெயர் உச்சரிக்கச் சற்று அந்நியமாக இருக்கலாம். ஏனென்றால் நாம் பெரிதும் அறிந்திருந்த ஐரோப்பியர்களான போர்த்துக்கேய, ஒல்லாந்த, ஆங்கிலேயர்கள் தவிர்த்து பிறிதொரு நாட்டினரின் மொழியிலமைந்த பெயர் இது.

இவர், நானூறு ஆண்டுகளுக்கு முன்னரே கிழக்கிலங்கையில் (சம்மாந்துறையில்) வரவேற்கப்பட்டு உபசரித்து வழியனுப்பி வைக்கப்பட்டவர். இக்கட்டுரை நமது நிலத்தோற்றத்தை, நமது மூத்த தலைமுறையை கண்டு, அறிந்து தனது தினக்குறிப்பில் எழுதி வைத்துச் சென்ற ஒரு தேசாந்திரியின் தினக்குறிப்பு பற்றிய சிறு அறிமுகக் குறிப்பே.

காலம் : பொ.ஆ.பி. 1618 டிசம்பர் 29

டென்மார்க்கின் அரசவையிலிருந்து இலங்கையின் கண்டி ராச்சியத்தை நோக்கி ஒரு தூதுக்குழு புறப்படுகின்றது.

தலைமை வகிப்பவர் டானிஸ் அட்மிரல் ஒவே கெய்தே. இந்தக்காலகட்டம் இலங்கையின் அரசியலில் இக்கட்டான காலமாக இருந்தது. கண்டி ராஜ்ஜியத்துடனான ஒப்பந்தங்களை மீறிய போர்த்துக்கல் தேசத்தாரை எப்பாடுபட்டேனும் இலங்கை நாட்டைவிட்டுத் துரத்திவிட வேண்டும் என்று கண்டிய தலைமை தருணம் பார்த்துக் கொண்டிருந்த வேளையது.

மேற்கிலிருந்து இன்னொரு பலமான சக்தியை எதிர்பார்த்திருந்த கண்டிய அரசினை டச்சுக்காரர்களும் தொடர்பு கொண்டனர். ஜொரிஸ் வான் ஸ்பில் பேர்கன் என்ற டச்சு தளபதி 1602 இலேயே இலங்கை மன்னனை சந்தித்து உடன்படிக்கைகளைச் செய்து கொண்டு புறப்பட்டிருந்தார். இந்த சந்திப்பைப் பற்றி பின்னர் பார்க்கலாம்.

ஸ்பில் பேர்கன் (Joris van Spilbergen) கண்டியை அடைந்த அதே கிழக்கு நுழைவாயிலைப் பயன்படுத்தியே ஒவே கெய்தேயின் குழுவினரும் கண்டியை அடைந்தனர். இவருக்கு முன்னர் போசோவெர (Boschouwer) என்கிற டானிஸ் நாட்டவர் கண்டிக்குச் சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஒவே கெய்தே இவர் 1594 டிசம்பர் 27இல் இராச குடும்பமொன்றில் பிறந்தவர். அட்மிரலாக பதவியுயர்வு பெற்ற ஒரு திறமைவாய்ந்த அதிகாரியாகக் காணப்பட்டார். இவர் தனது இலங்கைக்கான முழுப்பயணத்தையும் குறிப்பேட்டில் பதிந்து வைத்திருக்கின்றார். இவரின் டானிஸ் மொழிக் குறிப்பினைக் கொண்டு ஆர்.எல்.புரோஹியர் (R.L.Brohier) இலங்கைத் தங்கண்டு ஊஜிதப்படுத்தி ஆய்வுக் கட்டுரையொன்றையும் வெளியிட்டிருக்கின்றார். இந்தப்பயணக்குறிப்பில் இருந்து நமது பிராந்தியம் பற்றிய அன்றைய தகவல்களைப் பெற்றுக் கொள்ளக்கூடியதாய் இருக்கின்றது.

இவரது பயணத்தின் சுவாரஸ்யமான முக்கிய சில பகுதிகளைப் பார்க்கலாம்.

1620 ஆகஸ்ட் மாதம் 03ஆம் திகதி திங்கட்கிழமை டென்மார்க் தூதுக் கோஸ்லியின் கப்பல் புளியந்தீவுக்கு அண்மையில் நங்கூரமிடப்பட்டது. அங்கிருந்து சிறிய படகுகளில் மட்டக்களப்பு வாவியூடாக அவர்களின் பயணம் தொடர்ந்தது. முதலில் இவர்கள் பளுகாமத்தை அடைந்தார்கள். பளுகாமம் இவரது குறிப்புகளில் 'பள்ளிகமே' ' Palligamme ' என்று குறிப்பிடப்படுகின்றது. பளுகாமத்து வன்னியன் இவர்களை வரவேற்றதோடு சம்மாந்துறை வன்னிபத்தை நோக்கி வழியனுப்பி வைத்துள்ளார்.

ஒவே கெய்தே இதைக் குறிப்பிடும் போது 'நாங்கள் இரவு பத்து மணியளவில் பளுகாமத்தை அடைந்தோம், அங்கு அரசர் எங்களைச் சிறப்பான வாத்திய இசையுடன் வரவேற்றார்' என்று குறிப்பிடுகின்றார். இவ்வாறு வாத்தியங்களுடன் வரவேற்கும் மரபு தொன்று தொட்டு இங்கு நிலவியிருக்கின்றது. இதேபோன்றே ஸ்பில் பேர்கனும் சம்மாந்துறையில் வரவேற்கப்பட்டார்.

அதேநேரம் ஒவே கெய்தே இங்கிருந்த வன்னியனார்களை சிறிய ராஜ்சியங்களின் அரசர்களாகவே புரிந்து வைத்திருந்திருந்தார் என்று புரோஹியர் தனது கட்டுரையில் குறிப்பிடுகின்றார். அது சரியான புரிதலும் கூட, ஏனெனில் அக்காலத்தில் வன்னியர்களில் அதிகாரம் சிற்றரசர்களை விடச் சுதந்திரமானதாக இருந்து வந்துள்ளமை கெய்தேயின் புரிதலில் குறைபாடுகள் இருக்கவில்லை என்பதை உணர்த்துகின்றது.


இங்கு இன்னொரு சுவாரஸ்யமான விடயத்தையும் குறிப்பிட்டாக வேண்டியுள்ளது. பளுகாமத்து வன்னியன் ஒவே கெய்தேயின் கையில் முட்டையின் மஞ்சட்கருவைக் கொடுத்து வரவேற்றதாகவும். அதைப் பெற்ற அவர் அவசரமாக அரசனிடம் பெற்று அதை விரைவாகவே தனது அதிகாரியொருவரிடம் கைமாற்றிதாகவும் குறிப்பிடுகின்றார்.

இதைப்பற்றி கருத்துத் தெரிவித்துள்ள புரோஹியர் இவ்வாறான நடைமுறை புழக்கத்தில் இருந்ததா என்பது ஐயத்திற்குரியது என்றும் இது எலுமிச்சம்பழமாக இருந்திருக்க வேண்டும் என குறிப்பிடுகின்றார்.

இதைப் பற்றி மட்டக்களப்பு வாழ் நண்பர்களிடம் விசாரித்த போது மங்கலப் பொருட்களைக் கொடுத்து வரவேற்று உபசரிக்கும் போது வெற்றிலை பாக்குடன் எலுமிச்சை கொடுத்து வரவேற்பது மங்களகரமானதொன்றாக கருதப்பட்டு வந்ததாக குறிப்பிடுகின்றனர். மேலும் கிழக்கிலங்கை தமிழ், முஸ்லிம் மக்களிடையே வட்டாவைத்து அழைத்தல், வெள்ளை விரித்து அழைத்தல், ஆரத்தி எடுத்தல், மாலை போடுதல், அத்தர் தடவுதல், பன்னீர் தெளித்தல், மலர் தூவுதல், குரவை விடுதல், பொல்லடித்தல் போன்ற மரபு வரவேற்பு நடைமுறைகள் இப்பிரதேசத்தில் வழக்கில் இருந்து வந்திருக்கின்றன.

அதே வேளை 'தண்ணீர் சேர்த்து குழைத்த மஞ்சள் அல்லது சந்தனம் மஞ்சட்கரு போலவே தோன்றும். அவற்றை விருந்தினர் வரவேற்பில் பயன்படுத்தும் மரபு உண்டு. ஒருவேளை அவற்றை முன்பு கண்டறியாத அவர் முட்டை மஞ்சட்கரு என்று தவறாக ஊகித்திருக்கக்கூடும்' என்று ஆய்வாளர் துலாஞ்சனன் கருதுகின்றார். எனவே முட்டையின் மஞ்சட்கருவாக இருந்திருக்க முடியாது என்கிற புரோஹியரின் ஊகம் சரியாகத்தான் இருக்க வேண்டும்.

மேலும் இரவு வேளைகளில் முட்டை, ஊசி போன்ற பொருட்கள் இன்னொருவருக்கு கொடுப்பது கூடாது என்கிற மரபு நம்பிக்கையும் கிழக்கிலங்கை மக்களிடையே நிலவுகின்றது. அடுத்த நாள் பயணம்



தொடர்ந்தது, மட்டக்களப்ப வாவியின் தென்அந்தத்தை நோக்கி படகுகள் புறப்பட்டன. அட்மிரல் ஒவே கெய்தே, இரு கப்பல் அதிகாரிகள், போத்துக்கேய மொழி பெயர்பாளராக மார்டின் பின்சே என்கிற டச்சுக்காரர் மற்றும் இன்னொரு சிங்கள மொழிபெயர்ப்பாளரும், உள்ளூர் வழக்காறுகள் பற்றி அறிந்த இராஜதந்திர நடவடிக்கைகளுக்கு உறுதுணையான வழிகாட்டி ஒருவரும், துடுப்பு வலிக்க டென்மார்கிய படகோட்டிகளும், துப்பாக்கி வீரர்களும் (Musketeers) உட்பட 17 வெளிநாட்டுப் பிரதானிகள் கலந்துகொண்டனர்.

அந்தத்தை நெருங்க நெருங்க சேற்றுக்குள் வேரூண்றிய பசுமையான சதுப்புநிலபுதர்களை அடைந்ததாகவும். சூரியன் முழு உச்சத்தை அடைந்திருந்த அவ்வேளை முகங்களில் வியர்வை வடிய வடிய துடுப்பு வலிப்பவர்கள் முழு பலத்தையும் பிரயோகித்து முயற்சி செய்து குளிர்ந்த மாலைநேரம் சம்பன் துறையை அடைந்தாகக் குறிப்பிடுகின்றனர்.

ஒவே கெய்தே சம்மாந்துறையைக் குறிப்பிட ' Siambandure ' என்று குறிப்பிட்டதாகவும் 'மட்டக்களப்பு அரசன் வசிக்கும் பட்டணம்' என்று விவரித்திருந்ததாகவும் இங்கு அவர் பிரயோகித்த அரசன் என்ற பதம் சிங்கள அரசனின் கிழக்கு பிரதேசத்தின் தேசாதிபதி (Over Lord of the Eastern territory) என்பதைக் குறிப்பதாக புரோஹியர் குறிப்பிடுகின்றார்.

சம்மாந்துறை மட்டக்களப்பின் துறைமுகப்பகுதியை மாத்திரம் குறித்த பெயர் என்பதும் மட்டக்களப்பு என்ற பெயரே பட்டணத்தின் பெயராக இருந்தமையினையும் இதன்மூலம் நாம் தெளிந்து கொள்ளலாம். போர்த்துக்கேயரினால் புளியந்தீவில் கோட்டை கட்டப்பட்டதும் மட்டக்களப்பு என்ற பெயர் பட்டிக்கொலவாக மாற்றம் பெற்று புளியந்தீவுப்பிராந்தியத்திற்கு வழங்கப்பட சம்மாந்துறை என்ற துறையின் பெயர் முழு மட்டக்களப்பு வன்னிபப் பிரதேசத்திற்கும் பெயராகியது. இதனால் இடப்பெயரொன்று 40 கீலோமீட்டர் தூரத்திற்கு இடம்பெயர்ந்து விட்டது. இது விரிவாக அலசப்படக்கூடிய விடயமாகும்.

இதை பற்றி புரோஹியர் குறிப்பிடும்போது. எட்டு ஆண்டுகளின் பின்னர் போத்துக்கேயர் புளியந்தீவில் கோட்டை கட்டிய பின்னர் மட்டைக்களப்பு என்ற பெயரை இரவல்பெற்று (பின்னர் பற்றிகொல ஆக திரிந்தது) புதிய கோட்டைக்குச் சூட்டினர். 32 மைல் இடைவெளியில் இரு ஸ்தலங்களும் இருந்தன, இது 300 ஆண்டுகளின் பின்னர் குறிப்புகளை ஆராய்ந்த தன்னை ஆரம்பத்தில் குழப்பத்திற்குள்ளாக்கியதாக குறிப்பிடுகின்றார். இவர்கள் சம்மாந்துறையில் தரையிறங்கிய அவ்வேளை சம்மாந்துறை வன்னியனார் சுகவீனமுற்றிருந்ததால் வாழ்த்துவதற்கு சமூகமளிக்கவில்லை என்றாலும் அவருடைய வாசஸ்தலம் வரைக்கும் விருந்தினர்களை வரவேற்கும் முகமாக பெரும் ஊர்வலம் ஒன்றை ஏற்பாடு செய்திருந்தார். பலத்த மேளதாள வாத்தியங்களோடு விசித்திரமான இப்புதிய விருந்தினர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர்.

அவர்களைத் தொடர்ந்து சிங்களவர்கள், தலைப்பாகையணிந்த தமிழர்கள், முஸ்லிம்கள், முக்குவர்கள், வேடர்கள் உள்ளிட்ட பெரும் மக்கள் கூட்டமும் பின்தொடர்ந்து சென்றதாக குறிப்பிடுகின்றார்.

பிரபலமான கொட்டியாரத்துறையிருந்து (திருகோணமலையிலிருந்து) கண்டி செல்லும் பாதையைத் தவிர்த்து, ஒவே கெய்தே ஏன் மட்டக்களப்பு பாதையைத் தேர்ந்தெடுத்தார் என்ற கேள்விக்கு அவர் கூறும் காரணம் பின்வருமாறு அமைகிறது.

- பகுதியளவில் அங்கு (கொட்டியாரத்தில்) கப்பல்களுக்காக அதிக கட்டுப்பாடுகளை ஒழுக வேண்டியிருப்பதாகவும், மட்டக்களப்பு பாதை குறுகிய இலகுவான பாதையாயிருப்பதாகவும் குறிப்பிடுகின்றார்.
- மேலும் ஸ்பில்பேர்கன் இதே பாதையைப் பயன்படுத்தியமையும்,
- மனசஞ்சலமிருப்பினும் தயக்கமின்றி வரவேற்று உபசரித்த மட்டக்களப்பு சிற்றரசனின் தயாளகுணத்தன்மையும்

இவரை மட்டக்களப்புப் பாதையைப் பயன்படுத்த மேலும் ஊக்கப்படுத்தியுள்ளது. ஆனாலும் 1602இல் ஸ்பில் பேகனின் வரவுக்குப் பின்னர் இலங்கையில் இடம்பெற்ற மாற்றங்கள் சற்று சிரமங்களை ஏற்படுத்தியிருந்து. போர்த்துக்கேயரின் கொள்ளைகளுக்கும் சூறையாடல்களுக்கும் பயந்து வழிப்பாதையில் இருந்த பல

மு.இ.மு.சாக்கீர்,
மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானமானி

கிராம மக்கள் தப்பியோடியமையால் சில கிராமங்கள் கைவிடப்பட்டிருந்தன. இதனால் சம்மாந்துறையிலிருந்து கண்டி செல்வதற்கு துணையாக சம்மாந்துறையில் உள்ளூர் ஆட்களை பெறுவது கடினமாக இருந்ததாகவும் இதற்காக பெருமளவு அன்பளிப்புகளை வழங்கி ஒருசிலரையே பெற்றுக் கொள்ள முடியுமாயிருந்ததாகவும் குறிப்பிடுகின்றார்.

வழக்கத்தைப்போன்று மகிழ்வாய் பொழுதைக்கழித்த பின்னர் நள்ளிரவில் அடுத்த இடத்திற்கு பயணப்பட தொடங்கினர். மீண்டும் இருளானதும் 23 டானிஸ் மைல் தொலைவில் நாமல் ஓயாவின் கரையில் ஆளரவமற்ற பட்டி பொல் என்ற இடத்தில் தங்கியதாகவும் பசியை போக்கிக் கொள்ள இரண்டு காளைக் கன்றுகளை கொன்றதாகவும் குறிப்பிடுகின்றார்.

இந்த இடங்களைப் பற்றி குறிப்பிடும் புரோஹியர் இவை தற்போது சேனநாயக்க சமுத்திரத்தின் நீர்வளத்தினால் பச்சைப்பசேலெனக் காட்சி தந்தாலும். கெய்தே பயணப்பட்ட காலத்தில் ஒவ்வொரு மைலுக்கிடையிலும் சிக்கலான முட்களடந்த பற்றைக்காடுகளாக இருந்துள்ளன. மேலும் இவை தகிக்கும் அயனமண்டல வெப்பத்தை வெளியிடும் சூழலாகவும் இருந்துள்ளன. இவர்கள் கடந்து சென்ற அம்பாறை மற்றும் கொண்டவட்டுவான் குளங்கள் மலேரியா பெருக்கமுடைய சதுப்பாக இருந்ததாக குறிப்பிடுகின்றார். இவர்கள் பயணப்பட்ட ஓகஸ்ட் மாதம் இலங்கையின் கிழக்குப் பகுதியில் 'கச்சான்' எனப்படும் உலர் காற்று வீசும் காலகட்டமாகும். இதன்போது பெருமளவான ஆறுகள் குளங்கள்,

தொடர்ச்சி... (பக்கம் -15 )





# சுராங்கனிட்ட மாலு கெனாவா

## யார் அந்த சுராங்கனி ?

இலங்கையில் மாத்திரமன்றி, தமிழகத்திலும் பட்டி தொட்டியெங்கும் புகழ்பெற்ற "சுராங்கனி" பாடலை உங்களில் பலருக்குத் தெரிந்திருக்கும். இலங்கையின் பொப்பிசை மன்னன் ஏ.ஈ.மனோகரனால் 1970களில் எழுதப்பட்ட இப்பாடல், இலங்கை வானொலியால் தமிழகத்திலும் களை கட்டியது. பிற்காலத்தில் இந்தி மற்றும் கொங்கணியிலும் மொழிமாற்றப்பட்டு பட்டையைக் கிளப்பியது. சில ஆண்டுகளுக்கு முன், விஜய் அண்டனி, தினேஷ் கனகரட்ணத்தின் தயவில் மீண்டும் பரவலாக பேசப்பட்டது.

இப்போது விடயம், சுராங்கனி பாட்டு அல்ல, அந்தப் பாட்டில் வரும் "சுராங்கனி"யைத் தெரியுமா? யார் அந்த சுராங்கனி?





அதைப் பார்ப்பதற்கு முன் சுராங்கனி இடம்பெறுகின்ற ஒரு சிங்கள நாட்டார் கதையொன்றை நாம் பார்க்கவேண்டும்.

ஊஞ்சலில் அமர்ந்து சந்தோசமாக பாடல் பாடி ஆடிக்கொண்டிருந்தாள் சுராங்கனி. தூரத்தில் யாரோ தன்னை உற்றுப்பார்த்துக்கொண்டிருப்பது போன்ற உணர்வு. "யாரது?" என்றபடியே

### ஈஸ்வரனுக்கும் சுராங்கனிக்கும் என்ன தொடர்பு?

திரும்பினாள். மரத்தின் மறைவில் இருந்து வெளியேறினான் அந்த இளைஞன்.

பேரழகன். அவள் பார்வையை வேறுபக்கம் திருப்பிக்கொண்டு கேட்டாள் "யார் நீ? இங்கே என்ன செய்கிறாய்?" அவன் புன்னகைத்தான். "என் பெயர் ஈஸ்வரன். உன்னைப் பார்க்கவே ஒளித்திருந்தேன்." அவள் பொய்க்கோபத்துடன் திரும்பினாள் "என்ன வேண்டும் உனக்கு?" "எனக்கு என்ன வேண்டுமென்று உனக்குத் தெரியாதா என்ன?" அவன் அவளை நெருங்கி கைகளை நீட்ட அவள் திடுக்கிட்டு மெல்ல விலகினாள் "நீ திருமணமானவன்". அவன் வியப்படைந்தான். "எப்படித் தெரியும் உனக்கு?" அவள் அவன் பக்கம் திரும்பாமலே "குழந்தைகள் இருக்கிறதா?" என்று கேட்டாள். "ஒரு மகன்" சொல்லும் போது அவன் தலை குனிந்திருந்தது.

திரும்பிய அவள் கண்களில் மாறாத காதல். "எனக்கொன்றும் தடை இல்லை. என்னால் உன் குடும்ப வாழ்க்கை சிதையக்கூடாது. போய் இப்படி ஒரு பெண்ணை மாற்றாளாக ஏற்க உன் மனைவி தயாரா என்று கேட்டு வா." அவன் கண்கள் மகிழ்ச்சியில் மலர்ந்தன. "நிஜமாகவா சொல்கிறாய்?" "இதில் விளையாட்டு ஒன்றும் இல்லை. அவள் சம்மதம் பெற்று என்னை வாழ்நாள் முழுவதும் உன் வீட்டில் ஒன்றாக வைத்திருப்பாய் என்றால் மட்டுமே நான் உனக்கு இணங்குவேன்". "அவள் சம்மதிப்பாள்" ஈஸ்வரன் மெதுவாகச் சிரித்தான்.

அவன் மனைவி உமையாங்கனி, கண்ணகியைத் தூக்கிச் சாப்பிடுமளவு பத்தினி. கணவன் சொன்னதை பொறுமையாகக் கேட்ட அவள் மறுப்பெதுவும் சொல்லவில்லை. ஈஸ்வரனுக்கோ மகிழ்ச்சியில் என்ன செய்வதென்றே தெரியவில்லை. அதே வேகத்தில் சுராங்கனியிடம் ஓடினான்.

அங்கு அவனுக்கு இன்னொரு இன்ப அதிர்ச்சி. சுராங்கனி கர்ப்பிணியாக இருந்தாள். அவளது தயக்கம் தீரவில்லை. "ஒரு பெண் தன் வாழ்க்கையில் இன்னொரு பெண்ணுக்கு இடம் கொடுப்பதே பெரிய விடயம். ஆனால் கர்ப்பிணியான ஒருத்தியை சக கிழத்தியாக ஏற்க யாருக்குத் தான் மனம் வரும்? உன் மனைவியின் அனுமதி கிடைக்காமல் நான் வரமாட்டேன்" ஈஸ்வரன் தயங்காமல் மீண்டும் போய் அனுமதி வாங்கி வந்தான்.

வந்தவனுக்கு இன்னொரு அதிர்ச்சி. ஒரு வயது மகனுடன் அவள் மீண்டும் கர்ப்பமாக இருந்தாள். "நானென்றால் கர்ப்பிணியை மாற்றாளாக ஏற்றாலும், இரண்டு பிள்ளைக்குத் தாயை ஏறெடுத்தும் பார்க்கமாட்டேன். அதிலும் உன் மனைவிக்கு ஒரே ஒரு மகன் தான். என்னை அவளால் எப்படி சரிசமமாக நடத்த முடியும்?" சுராங்கனி மூக்கைச் சிந்தும் போது ஈஸ்வரனாலும் என்ன தான் செய்ய முடியும், பாவம்? மீண்டும் உமையாங்கனியிடம் அனுமதி பெறச் சென்றான் அவன். இப்படி ஒரு தடவை, இரண்டு தடவை அல்ல, ஏழு தடவைகள் உமையாங்கனியிடம் ஈஸ்வரன் சென்றதும், சுராங்கனிக்கு ஏழு ஆண் குழந்தைகள் பிறந்ததும் நடந்தது. ஏழாவது தடவை செல்லும் போது ஈஸ்வரனுக்கே கொஞ்சம் சந்தேகமாகத் தான் போய்விட்டது. இதென்ன அதிசயம் இப்படி ஏமாற்றுகிறாள்? அவள் ஏதும் வன தேவதையா? மோகினிப்பிசாசா? பார்ப்போம் நீயும் வா என்று உமையாங்கனியையும் அழைத்துக்கொண்டு திரும்பினான் ஈஸ்வரன்.

ஆனால் அங்கு சுராங்கனி இருக்கவில்லை.

உமையாங்கனியின் அண்ணன் உற்பலவண்ணன் ஆறு குழந்தைகளுடனும் அமர்ந்து விளையாடிக்கொண்டிருந்தார். "நீங்கள் எப்படி இங்கே? சுராங்கனி எங்கே? ஆறு பேர் தானே உங்களோடு நிற்கிறார்கள்? மூத்தவன் எங்கே?" ஈஸ்வரன் பரபரப்படைந்தான். உற்பலவண்ணன் உதட்டை மடித்து குறும்புச்சிரிப்பு சிரித்தார். "அவன் பூப்பறிக்கப் போய் விட்டான் அத்தான்."

உமையாங்கனியோ வைத்த கண் வாங்காமல் ஆறு குழந்தைகளையும் விழுங்குவது போல் பார்த்துக்கொண்டிருந்தாள். "என் குழந்தைகள் தானடி தங்கச்சி" உற்பலவண்ணன் சொல்லும் போதே அவளது கண்கள் மகிழ்ச்சியில் குளமாகி விட்டன. "அனே மகே ஐயாகே கந்த குமாரயா" (ஐயோ, என் அண்ணாவின் மலை [போல் வளர்ந்த] மக்களே) என்று அழுதபடியே ஆறு பேரையும் கட்டியணைத்தாள் உமையாங்கனி. அப்போது தான் அந்த விந்தை நிகழ்ந்தது. அறுவரும் ஒருவராகினர்.

வி. துலாஞ்சனன்

ஆறு பேருக்குப் பதில் அங்கு ஒருவன் - கந்தகுமாரன் நின்று கொண்டிருந்தான். ஈஸ்வரன் திகைத்தபடி நிற்க, விழுந்து விழுந்து சிரித்தபடியே உற்பலவண்ணன் சொன்னான் "ஐயோ அத்தான், நான் தான் அந்த சுராங்கனி!"

கதை எங்கு போய் முடிகிறது என்று ஊகித்திருப்பீர்களே! ஆம். அதே கந்த புராணத்தில் தான். சிவன் - மோகினி கதை தான் சிங்கள நாட்டார் வழக்கில் மாற்றமுற்று இப்படி ஈஸ்வர தெவியோ - சுராங்கனி கதையாக மாறி நிற்கின்றது! உபுல்வன் தெவியோ என்று சிங்களத்தில் அழைக்கப்படும் உற்பலவண்ணன் திருமாலும் அப்படியே வருகிறார் இங்கு. கந்தன் திருமாலுக்குப் பிறப்பது தான் கதையில் சுவாரசியமே!

ஆம். சிங்களத்தில் சுராங்கனி என்றால் மோகினி என்று தான் பொருள். சுரா என்பதற்கு மது என்ற அர்த்தமும் உண்டு. மயக்கும் சுராபானம் போன்றவள் சுராங்கனா. கொசுறுத்தகவல் இரண்டு சொல்லவேண்டும். எனக்குத் தெரிந்த ஒரு

தொடர்ச்சி... (பக்கம் -15 )

# தனிமனித அபிவிருத்தியே சமூக அபிவிருத்தி

இன்றைய நவீன சூழலில் சமூகத்தின் அசைவியக்கத்தை ஏற்படுத்தும் முக்கிய காரணி மனிதனது செயற்பாடாகும். மனிதனும், சமூகமும் ஒரு நாணயத்தின் இரு பக்கமாக நின்று அரசியல், சமூக, பொருளாதார, கலாச்சார மாற்றங்களையும் பங்கு கொள்ளும் திறன் வரவேற்கத்தக்கது. என்ற வகையில் மனிதநடத்தை, செயற்படும் விதம், அவன் வெளிப்படுத்தும் திறமை மூலமே சமூக அபிவிருத்தியை ஏற்படுத்த முடியும். தனி மனிதனின் விருத்தியும், முன்னேற்றமும் மாற்றமும், கொள்கைகளும், அறிவியலும் பிரதிபலிக்கும் இடம் சமூகம். எனவே தான் மனிதன் தனித்து வாழ்வதை விட்டு சமூகத்தில் நிலைத்து வாழ தலைப்பட்டுள்ளான்.

'தனிமனித அபிவிருத்தியே சமூக அபிவிருத்தி' ஆகும். 'அரிஸ்டோட்டில்' என்ற அறிஞர்கூட 'மனிதன் ஒரு சமூக பிராணி' என்றுள்ளார். அந்த வகையில் தனி மனிதன் எவ்வாறு அபிவிருத்தி செய்யப்படுகின்றான்? அதனூடாக சமூகம் எவ்வாறு விருத்தியை எட்டுகின்றது என நோக்குவோம்.

புவியில் மனிதன் தோன்றி இன்று பல 100 ஆண்டுகளாயினும் மனிதனானவன் தனது வாழ்வில் அடைந்த முன்னேற்றங்களுக்கும், அறிவியல் சார் பரிமாண வளர்ச்சிக்கும் பிரதான காரணம் கல்வி ஆகும். அந்த வகையில் இன்றைய கல்வி அறிவை மட்டும் அல்ல மாணவர்களோடு சேர்ந்து வாழக் கற்கின்ற சூழலையும், வீட்டிற்கு நாட்டிற்கு உதவுகின்ற விழுமியங்களையும், சவால்களை எதிர்கொள்ளும் தன்மையையும், சமூக அபிவிருத்தியையும் மனிதனூடாக ஏற்படுத்த கல்வி உதவுகின்றது. மனிதன் அவற்றை சமூகத்தில் பயன்படுத்த எத்தனிக்கும் போது அது சமூக வளர்ச்சியாக உருமாறுகின்றது.

மனிதன் பிறப்பு முதல் இறப்பு வரை 'அரசியல்', பொருளாதாரம்'. குடியேற்றம், பௌதீகவியல், உற்பத்தி, நீர்பாசனம், வர்த்தகம் நுகர்வு, நடத்தை அபிவிருத்தி என்பனவற்றில் கால மாற்றத்திற்கு ஏற்ப புதிய திட்டங்களை வகுத்து செயற்படும் போது சமூகம் வளர்சியை தொடுகின்றது.

மேலும் ஒரு தனியாள் வருமானம் அதிகரிக்கும் போது அது ஒரு நாட்டின் தேசிய வருமானத்திலும் செல்வாக்கு செலுத்தும் இதை தளமாகக் கொண்டு தான் 'பொருளாதார நாடு' என்ற பெயர் பெறுகின்றது.

ஒரு தனியாள் சமூகத்தோடு இணைந்து வாழ்வதற்கு தேவையான சமூக,சமய, கலாச்சார, பண்பாட்டையும், ஒழுக்ககோவைகள் மற்றும் சமூக



விழுமியங்கள் போன்ற விடயங்களை கற்று, தானும் ஒரு அங்கத்தவனாக வாழ்வதற்கு முயலும் செயன்முறையே 'சமூகமயமாக்கல்' எனப்படும்.

எனவே ஒரு தனிமனிதனை சமூகமயமாக்குவதில் சமூக நிறுவனங்களான பாடசாலை, குடும்பம், ஊடகம், சகபாடிகள், கல்வி நிலையங்கள், ஆலயங்கள் என்பன அளப்பரிய பணியை செய்கின்றன. எனவே ஒவ்வொரு மனிதனின் வாழ்வு சமூகமயப்படுத்தும் போது தான் ஆரோக்கியமான சமூகம் உருவாகின்றன. தனிமனிதனின் நற்பழக்கங்கள், நடத்தை கோலங்கள், சடங்கு சம்பிரதாயங்கள் பிரச்சினைகளை எதிர்கொள்ளல், சமூகத்தோடு இணைந்து வாழல், நடத்தை விருத்தி,சிந்திக்கும்ஆற்றல்

கி.சிவரஞ்சினி
2ம் வருடம் முதலாம் அரையாண்டு
கல்வி பிள்ளை நலத்துறை
(சிறப்பு கற்கை)
கிழக்குப்பல்கலைக்கழகம்

என்பவற்றை தீர்மானிக்கின்றன. எனவே சிறந்த சமூகத்தை நாட்டில் உருவாக்க வேண்டுமாயின் சமூக நிறுவனங்களின் பங்களிப்பு காத்திரமாக அமைய வேண்டியுள்ளது.

இன்றைய காலத்தில் உலகையே புரட்டி போடும் தொழிநுட்பம் சமூக அபிவிருத்தியில் பெரும் பங்கெடுக்கின்றது.

அடுத்து ஒரு தனிமனிதனது முயற்சியால் பொருளாதார, அரசியல், கல்வியியல், துறையில் ஏற்படுத்தும் வெற்றி சமூகவிருத்தியில் பங்கெடுக்கின்றன. உதாரணமாக பாகிஸ்தானைச் சேர்ந்த மாலாலா யுசாசாப்சாய் என்ற முஸ்லிம் மாணவி பெண்கல்விக்காக போராடியமை. டாக்டர் அப்துல்கலாம், இந்தியாவின் ஜனாதிபதியாகவும், உலகின் விஞ்ஞானியாகவும், மற்றவர்களுக்கு சிறந்த எடுத்துக்காட்டாளராகவும் திகழ்ந்தவர். மற்றும் அன்னைதிரேசா ஏழை சிறுவர்களுக்காக கையேந்தி உதவி புரிந்தமை போன்றவற்றை குறிப்பிடலாம்.

எனவே தனிமனிதனது செயற்பாடு ஒரு சமூகத்திலும் ஒரு சமூகத்தின் செயற்பாடு ஒரு தனிமனிதனிலும் எந்தளவு செல்வாக்கு செலுத்தியுள்ளது என்பதை எம்மால் ஊகித்து பார்க்க முடிகின்றது. எனவே ஒரு தனிமனிதனால் எய்தப்படுகின்ற வெற்றிகள் மற்றும் மாற்றங்கள், அபிவிருத்தி செயற்பாடுகள் அனைத்தும் நிச்சயம் சமூகத்தின் மீது தாக்கம் செலுத்தும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

# படுவான் திசையில்

பக்க அனுசரணையாளர்:
அலையப்போடி நல்லரத்தினம்(அதிபர்)
அறிவாலயம் பவுண்டேசன்
மற்றும் வாழ்நாள் நன்கொடையாளர் சக்தி இல்லம்.

## குடிநீரை பணம் கொடுத்து வாங்குவேன் என கனவிலும் நினைக்கவில்லை!

'பணம் கொடுத்து குடிநீரை வாங்குவேன் என கனவிலும் கூட நான் நினைத்திருக்கவில்லை. ஆனாலும் பணம்கொடுத்து வாங்கும் நிலையை அடைந்திருக்கின்றேன்' என்கிறார் மண்முனை தென்மேற்கு பிரதேசத்தில் அமைந்துள்ள மகிழடித்தீவு கிராமத்தில் வசியும் வேலவல்லிபுரம்.

தமிழரின் பாரம்பரிய கலைகளான கூத்து, கரகம் போன்றவற்றினை வளர்த்தமையில் பெரும்பங்கு இவருக்குண்டு. இதனால் பிரதேசத்தில் இருவருக்கு தனிஇடமும் உண்டு. அண்மையில்தான் 80 வயதினை நிறைவுசெய்திருந்த இவர், இன்றும் கம்பீரமான தோற்றத்துடன், இவ்வருடமும் கூத்து ஒன்றினை பழக்க வேண்டும் என்பதில் ஆர்வத்துடன் செயற்பட்டு வருகின்றார். கூத்துக்கலையில் கூத்தராக, மத்தள, கொப்பி ஆசிரியராக திகழும் இவர், கரகத்தினையும் பழகி அவற்றினையும் அரங்கேற்றிய பெருமையும் இவருக்குண்டு. கலைகளின் ஊடாக தம்மை வெளிக்காட்டி பல்வேறு கௌரவங்களையும், பாராட்டுக்களையும் பெற்ற இவர், கடந்த கால அனுபவங்களையும் தற்போதைய அனுபவங்களையும், கொக்கட்டிச்சோலை பிரதேச கலாசார மண்டபத்தில் வைத்து பரிமாறிக்கொண்டார்.

80 வருடங்களை கடந்திருக்கின்ற தனது காலப்பகுதியில், பெரியளவிலான அனர்த்தங்களை எதிர்கொண்டதாகவும் கூறுகின்றார். வெள்ளம், சூறாவளி, வரட்சி, சுனாமி போன்றவை குறிப்பிட்ட நாட்களில் மாத்திரம் இடம்பெற்ற போதிலும் இதனால் பாரிய அழிவுகளையும் சந்திக்க நேரிட்டதாகவும் கூறுகின்றார். இவ்வாறான அனர்த்தங்களில் இருந்து மாறாபட்டதாகவிருந்த யுத்தத்தினை பல வருடங்கள் எதிர்கொள்ள நேரிட்டதாக (குறிப்பாக வாழ்நாளில் அரைப்பங்குக்கு மேலான பகுதியை) குறிப்பிடுவதுடன், இதனால்பட்ட துன்பங்களை இலகுவில் கொட்டி தீர்த்துவிடமுடியாதெனவும் தெரிவித்தார். இச்சம்பங்கள் பல நமது சமூகத்திற்கு தெரிந்தமையே, என்பதினாலும், இதுபற்றி பெரியளவாக பேசிக்கொள்ளாமல், தாம் கனவிலும்கூட நினைத்துப்பார்த்திராத குடிநீர் பிரச்சினை தொடர்பிலே இவர் அதிகம் பேசத்தொடங்கினார்.

மட்டக்களப்பு மாவட்டத்தினைப் பொறுத்தவரை, இயற்கை அன்னை கொடுத்த வளங்கள் நிரம்பவே இருக்கின்றன. இதனால் குறைவில்லாதவகையில் அனுபவிக்கக்கூடிய நிலை காணப்பட்டது. பெரிதாக செலவு செய்யவேண்டிய தேவையும் இருக்கவில்லை. குடிநீரைப் பொறுத்தவரை வருடத்தில் வரட்சி நிலவுகின்ற ஜூலை மாதம் தொடக்கம் செப்டெம்பர் மாதம் வரை நீர்மட்டம் குறைவடைந்து செல்லும் இதனால் குடிநீரைப்பெற சிலதூரங்கள் செல்லவேண்டிய நிலை இருந்ததாக கூறும் இவர், ஏனைய காலங்களில் போதும் இடங்களில் எல்லாம் பூவலும், மடுவும், கொட்டுமாகவே இருந்தன. இதன்மூலம் குடிநீரைப் பெற்றுக்கொண்டதாக கூறுகின்றார்.



பூவல் என்பது, 1அடி தொடக்கம் 2அடிக்குள் வெட்டப்பட்ட சிறிய மடுவை பூவல் என்றும், 2க்கு மேல் 3 அடி வரை வெட்டப்பட்ட குழியை மடுவென்றும், அதற்குமேல் வெட்டப்பட்டு கொட்டுப்பதிக்கப்பட்டதை கொட்டு, அல்லது கிணறு என்று அழைக்கும் வழக்கமும் இருந்தது. கொட்டு என்கின்ற போது, முதிரை, விளினை மரங்களை கொண்டு நடுவில் துளையிடப்பட்டதையே கொட்டு என்கின்றனர். இக்கொட்டுக்கள் நூற்றாண்டு கடந்தும் நிலைத்திருக்கும். கொட்டில் எடுக்கப்படும் நீர், மடு, பூவல் நீரைவிட தெளிவான நீராக காணப்படும். இவற்றில் இருந்துபெற்ற நீரையே அருந்தினோம். இதைவிடவும், வயல்கள், காடுகளுக்குச் சென்றால் தண்ணீர் உள்ள பகுதியில், குறிப்பாக ஆற்றின், குளங்களின், வாய்க்கால்களின் ஓரத்தில் சிறிய மடுவினை தோண்டி அந்நீரின் மேல்மட்ட நீரினை இறைத்துவிட்டு பின்னர் அந்நீரை குடித்துக்கொள்ளும் வழக்கமே எங்களிடம் காணப்பட்டன. இவ்வாறான செயற்பாடுகளை எனக்கு 60வயது வரை செய்தேன். ஆனால் எந்நோயும் எனக்கு ஏற்பட்டுவிடவில்லை. தற்போதைய சூழலில்தான், அக்கிணற்று நீரைக்குடிக்க வேண்டாம். போத்தல் நீரை அல்லது குழாய்மூலம் கிடைக்கின்ற சுத்திகரிப்பு நீரைத்தான் அருந்தவேண்டும் என்கின்ற வரையறைகளை இடுகின்றனர். அவ்வாறு இந்நீரை குடிக்காவிட்டால், வேறுநீரை குடித்தால் கிருமி எம்முடன் கலந்து பல நோய்களுக்கு ஆளாவோம் என பயமுறுத்துகின்றனர். ஆனால் முழங்கை வரை மடுதோண்டி குடித்து

> **சுவாசகாற்றையும் பணம் கொடுத்து வாங்கும் காலம் விரைவில்?**

படுவான் பாலகன்

வாழ்ந்தவர்கள்தான் நாங்கள். இப்போ, எல்லாமே சங்கடமான உலகமாச்சு. மடுதோண்டி குடிநீரை குடித்தமையால், குடிநீரை பணம் கொடுத்து வாங்குவேன் என்று நான் கனவிலும் நினைத்திருக்கவில்லை. ஆனால் இன்று நிஜத்திலே அதை காணும் போது எதுவும் நடக்கலாம் என்ற அனுபவத்தைப் பெறுகின்றேன்.

இப்போதைய நீரில் பல கிருமிநாசினிகளும், கிருமிகளும் கலக்கின்றமை உண்மைதான். அப்போதெல்லாம் விவசாய செய்கைகளுக்கு செய்கையாக உற்பத்திசெய்யப்பட்ட மனிதர்களை கொல்லக்கூடிய கிருமிநாசினிகள் தெளிப்பதில்லை. எல்லாமே இயற்கையில் கிடைத்த கலவையாகவே இருந்தன. அவை மனிதனுக்கு பாதிப்பை ஏற்படுத்தவில்லை. தற்போது, மனிதரை கொல்லும் கிருமிநாசினிகளை தெளிப்பதனால் குடிநீரும், கொலைநீராகிவிட்டது. எதிர்காலத்தில், தங்கத்தைவிட அதிகவிலைகொடுத்து வாங்கவேண்டிய பொருளாக குடிநீர் மாற்றப்படுவதையும், குடிநீருக்கான போராட்டமாகவே இருக்கக்கூடிய நிலையையும் தவிர்க்க முடியாது.

குடிநீருக்காக போராட்டத்தினை தற்போதும் மக்கள் நடாத்த ஆரம்பித்திருக்கின்றமை போன்று, சுவாசிப்பதற்கான ஒட்சிசனையும் சிலிண்டரில் அடைத்து சுவாசிக்க வேண்டிய நிலையையும் எம்பின்னால் வரும் சந்ததிகள் அனுபவிக்ககூடும் என்று எனக்கு புலப்படுகின்றது' என்று கூறிவிட்டு அவ்விடத்திலிருந்து கம்பீரமான சத்தத்துடன் எழுந்து நடந்தார் வல்லிபுரம்.

---

# மட்டு மாநகரசபை

## உள்ளூராட்சி மன்றங்களும் சனசமூக நிலையங்களும்

அன்பழகன் குரூஸ் (JP) M.A, P.G.Dip in Edu, Dip in LG.
சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்

கிராம அபிவிருத்திக்காக மக்களை ஒன்றிணைத்து சமூகமட்ட அமைப்புக்கள் உருவாக்கப்படுகின்றன. கிராமத்தில் உள்ள பல்வேறுபட்ட சமூக அமைப்புகளில் காலத்தால் முந்தியதும் உள்ளூராட்சிக்கேயுரியதுமான ஒரு சமூக அமைப்புத்தான் சனசமூக நிலையங்களாகும். சனசமூக நிலையங்கள் இலங்கையில் சுமார் நூறு ஆண்டுகளுக்கு முன்பே தோன்றிய வரலாறு உள்ளது. இன்று பல்தரப்பட்ட சமூக மட்ட அமைப்புக்கள் மத்தியில் அதன் பிரபல்யம் குறைந்துள்ளது. இவ்வாறு நீண்ட காலமாக இயங்கிவரும் சனசமூக நிலையங்களை ஒழுங்குபடுத்த 10.10.1987ஆம் ஆண்டில் உள்ளூராட்சி அமைச்சினால் வெளியிடப்பட்ட 'சனசமூக நிலையங்களின் போதனை' வழிகாட்டல் விதி பயன்படுகின்றது.

ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவுகளிலும் அங்கு வாழும் மக்களில் 18 வயதுக்கு மேற்பட்ட ஆண் பெண் இருபாலாரிலும் குறைந்தது 25ற்கு மேற்பட்டோர் ஒன்றிணைந்து தமக்குள் ஒரு சனசமூக நிலையத்தை உருவாக்க முடியும். அந்த சனசமூக நிலையம் குறித்த அந்த கிராமம் அமைந்திருக்கின்ற உள்ளூராட்சி மன்றத்தின் சபை தீர்மானத்துடன் உள்ளூராட்சி உதவி ஆணையாளரினால் பதிவு செய்யப்படும். இவ்வாறு பதிவு செய்யப்பட்டதும் அது சுயமாக இயங்கி அந்த கிராம அபிவிருத்தியில் பங்களிப்புச் செய்ய முடியும்.

ஒவ்வொரு கிராமங்களிலும் மக்கள் தம்மை ஒன்றிணைத்துக் கொண்டு நமக்கான தேவைகளை பெற்றுக் கொள்ளவும், தமது தேவைகளை அடைவதற்கான வழிமுறைகளை கண்டறியவும், தாம் சுயமாக சமூக, பொருளாதார, கலாசார, பண்பாட்டு, விளையாட்டு செயற்பாடுகளின்மூலம் தம்மை தாமாக விருத்தி செய்துகொள்ளவும் சனசமூக நிலையங்கள் செய்யப்படுகின்றன. ஒவ்வொரு சனசமூக நிலையங்களும் தமது மக்களுக்கு என்ன வேண்டும் என்பதை தீர்மானித்து, அதனை பெற்றுக் கொள்வதற்காக தொடர்ந்து இயங்க வேண்டும். அதன் நிர்வாகிகள் தனது ஆளுமையின் மூலம் கிராம அபிவிருத்தியை நோக்காகக்கொண்டு உள்ளூராட்சி மன்றங்களுடன் இணைந்து செயற்பட வேண்டும். கிராம மக்கள் தமது வளமான ஒரு அமைப்பாக சனசமூக நிலையங்களைப் பயன்படுத்தி தமது தேவைகளை அடைய முன்வரவேண்டும்.



இன்று இயங்கிக்கொண்டிருக்கும் சனசமூக நிலையங்களின் நிர்வாக உறுப்பினர்கள் பல்தரப்பட்ட ஆளுமை விருத்தியுடன், தலைமைத்துவ பண்புகளைத்தாங்கி, பலதரப்பட்ட பயிற்சிகளை பெற்று கிராம அபிவிருத்தியை நோக்காகக்கொண்டு செயற்பட்டு வருகின்றனர். தொடர்ந்து அவர்கள் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்.

உங்களுடைய கிராமத்தில் சனசமுக நிலையம் ஒன்று இருக்குமானால் அதில் உங்களை அங்கத்தவராக இணைத்துக் கொள்ளுங்கள். அந்த நிர்வாகத்தைப் பொறுப்பெடுத்து கிராமத்தை விருத்தி செய்ய முன்வாருங்கள். உங்கள் கிராமத்தில் சனசமூக நிலையம் ஒன்று இல்லையானால் உள்ளூராட்சி மன்றத்தை தொடர்புகொண்டு அங்கு ஒரு சனசமூக நிலையம் ஸ்தாபிப்பதற்கு ஒழுங்குகளைச் செய்யுங்கள். மக்கள் ஒன்றுசேரும்போது அங்கே பலம் அதிகரிக்கும். தமது தேவைகளை இலகுவாக அடைந்து கொள்ள முடியும். இதற்கான ஒரு உபாயம்தான் சனசமூக நிலையங்கள்.

சனசமூகநிலையங்கள் சுயமாக நிதி சேகரிக்க கூடிய வல்லமையுடையவை. அதற்காக தனித்துவமான நிதிக்கணக்கு பயன்படுத்தப்படும். ஒவ்வொரு ஆண்டும் தமது கிராமத்திற்கு தேவையான அபிவிருத்தி வேலைத்திட்டங்களை அடையாளம் கண்டு, நிறைவேற்ற முடியும். கலை கலாசார விழுமியங்களூடாக மக்களை ஒன்றிணைத்து சமூக விருத்தியை ஏற்படுத்த முடியும். பலதரப்பட்ட வேலைத்திட்டங்களை அடையாளம் கண்டு அதனால் தனிமனித திறன்களை விருத்தி செய்வதன்மூலம் சமூகத்தை மேம்படுத்தி கிராமத்தை வலுவூட்ட முடியும். எனவே சனசமூக நிலையங்களை வலுப்படுத்த அனைவரும் முன்வருவோம்.





# கிழக்கில் தொடரும் தற்கொலைகளும் இளையோர் சமூகமும்

சுந்தரசபாநாயகம் சஞ்சீவன்
(தற்காலிக போதனாசிரியர்)
நடன நாடகத்துறை,சுவாமி விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவகம்,
கிழக்குப்பல்கலைக்கழகம்

இலங்கையில் கிழக்கு மாகாணம் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மூன்று மாவட்டங்களை உள்ளடக்கியது. இலங்கையில் புவியியல் ரீதியாகவும் தமிழரின் அரசியல் ரீதியாகவும் பல முக்கிய வரலாற்று தடங்களை தன்னிடம் கொண்டதாக கிழக்குமாகாணம் காணப்படுகிறது. இத்துடன் தமிழர், சிங்களவர், முஸ்லிம்கள், பறங்கியர் என பல் சமூக பண்பாட்டுப் பின்புலத்தை கொண்டதாகவும் விளங்குகிறது.

கிழக்கு மாகாணத்தினை பொறுத்த வரையில் போரும் அதனுடைய தாக்கமும் அதன் பின்னரான தமிழர் அரசியல், இலங்கையின் பூகோள அரசியல் தாக்கங்களும் கிழக்கு மாகாணத்தையும் அதனுடைய மக்களையும் வெகுவாக பாதித்தமை முக்கியமான விடயமாகும். தமிழர் பிரதேசங்களிலும் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் போருக்கு பின்னரான காலப்பகுதியில் துரிதகதியில் பல்வேறுபட்ட மாற்றங்கள் ஏற்பட்டதும், ஏற்படுத்தப்பட்டதும் அனைவரும் அறிந்ததே. இந்த வகையில் கிழக்கு மாகாணத்தின் அடிப்படை கட்டமைப்புகளிலும் அதனுடைய பொருளாதார மற்றும் மனித வளங்கள் மீதும் பல மாற்றங்கள் சடுதியாக ஏற்பட்டன, ஏற்படுத்தப்பட்டன.

இந்தவகையில் போரினது இறுக்கமான கட்டுக்குள்ளும் போரியல் காரணிகளின் தாக்கங்களுக்குள்ளும் ஒரு குறுகலான நெருக்கடிமிக்க வழியின் ஊடாக பயணித்த மக்கள் கூட்டம் விரிவடைந்த புதிய கட்டமைப்பினுடாகவும் உலகமயமாக்கல் சிந்தனைகளுக்குள்ளாகவும் புதிய பண்பாட்டுக் கலாச்சார மாற்றங்களுக்கு ஊடாகவும் பல வர்த்தக பொருண்மீய திட்டங்களையும் கடந்து பயணிக்க வேண்டிய தேவைப்பாடு தோன்றியது. இதனை காரணங்களாகக் கொண்டு நவநாகரீக சிந்தனைவாத அடிப்படையில் அமைந்த பண்பாட்டியல் மாற்றங்கள் பல்வேறு ஊக்கிகளின் மூலமாக மக்கள் மத்தியில் விதைக்கப்பட்டமை என்பது முக்கிய அம்சமாகும்.

இதில் முதலாவதும் முக்கியமானதுமாக விளங்குவது, தொ(ல்)லைக்காட்சி. இதனுடைய வரவு என்பது ஆரம்ப காலத்திலேயே அமைந்திருப்பினும் கேபிள் இணைப்புக்கள் மற்றும் Dish Antenna எனப்படும் தொலைகாட்சி இணைப்புகளின் மூலமாகவே ஏற்பட்டது. இதிலும் அதிகமாக இந்திய தொலைக்காட்சி அலைவரிசைகளின் மூலமாக ஒளிபரப்பப்படும் தொடர் நாடகங்கள் மற்றும் சில மெய்மை நிகழ்ச்சிகள் (Reality Show) ஆகியவற்றின் மூலமாக போதிக்கப்படும் பேதமையான கருத்தாடல்களும், போலித்தனமான ஆடம்பரங்களும், பகட்டான வாழ்வியல் சித்தரிப்புக்களும், தவறான காதல் கோட்பாடுகளும், முறையற்ற மனித வாழ்வியல் நடத்தைப் போக்குகளும் பேராற்றல் மிக்கவையாக மக்கள் மனங்களில் பதியவைக்கப்பட்டிருப்பதுடன் அவற்றின் ஊடான மக்களின் மனோவியல்பு மாற்றங்களும் அடிப்படையான பூர்வீக வாழ்வியலின் மீதான பற்றுதலையும் விட்டு விலகி பயணிக்கவைத்துள்ளது எனலாம்.

தொடர் நாடகங்களிலும் பிரபலமான மெய்மை நிகழ்ச்சிகளிலும் காண்பிக்கப்படும் நிகழ்வுகளும் செயற்பாடுகளும் கவர்ச்சி மிக்கதாகவும் அமைவதனால் அதே போன்று தமது வாழ்வியலையும் அமைத்துக் கொள்ள தூண்டும் அளவுற்க்கு மக்கள் மத்தியில் கருத்தியலை ஆழமாக வேரூன்ற வைத்திருப்பதை காணமுடிகிறது. இதன் மூலமாக தற்கால சூழமைவில் பரவலாக காணப்படுகின்ற பெண்கள் மற்றும் சிறுவர்கள் மீதான வன்முறைகளும் போதைப்பொருள் மற்றும் மதுப்பாவனைகளும் வன்முறைப்போக்கான வாழ்வியல் முறைகளும் ஊக்குவிக்கப்படுகின்றன.

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்புக்களின் பிரகாரம் அதிகளவானவர்கள் தற்கொலை செய்து கொள்ளும் மாகாணமாக கிழக்கு மாகாணம் காணப்படுகிறது. இதில் 16 முதல் 30 வயது வரையிலான இளைஞர் யுவதிகளே அதிகமாக தற்கொலைகளின் மரணிப்பதாக ஆய்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இவ்வாறான செயற்பாடுகளுக்கு கிழக்கு மாகாணத்தில் நிலவும் மோசமான பொருளாதார நிலமையும் ஒரு காரணமாகின்றது. கிழக்கு மாகாணமானது கடல் வளத்தினையும், நன்நீர் வாவிகளையும், பசுமையான வயல்நிலங்களையும், மேய்ச்சல் நிலங்களையும், கால்நடைகளையும் கொண்டிருக்கின்ற பொழுதும் பொருளாதார ரீதியான வீழ்ச்சி என்பது எவ்வாறு சாத்தியம் ஆகும்? என்ற கேள்வியானது அனைவரது மனங்களிலும் எழுவது இயல்பானது தான். இதற்கு பல காரணிகள் பின்புலத்தில் காணப்படுவதை உன்னிப்பாக நோக்க வேண்டிய காலத்தின் கட்டாயத்தில் நிறுத்தப்பட்டுள்ளோம். கிழக்கு மாகாணமானது பல்வேறுபட்ட காலப்பகுதிகளிலும் பல்வேறுபட்ட அரசியல் நிகழ்ச்சி நிரல்களுக்கு ஏற்ப மாறி மாறி செயற்பாடுகளுக்கு ஊடான மாற்றங்களும் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். தமிழர் மரபுவழி பண்பாடுகளையும் கலைகலாச்சார அம்சங்களையும் பல பூர்வீக வரலாற்று முக்கியதுவம் மிக்க பிரதேசங்களையும் தன்னகத்தேகொண்ட கிழக்குமண் கடந்த சில காலங்களாக எதிர்கொள்ளும் 'தற்கொலை'' என்ற சிக்கல் நிலமை விரிவாக நோக்கப்படவேண்டியதும், இவை தொடர்பான தெளிவுபடுத்தல் சார்ந்த செயற்பாடுகள் மக்கள் மத்தியில் தொடர்ச்சியாக முன்னெடுக்க வேண்டியதும் அவசியமாகிறது.

இலங்கை அரசாங்கத்தினுடைய சமூக தரவுகளின் அடிப்படையில் 2017ம் ஆண்டின் அறிக்கையின் படி 2016ம் ஆண்டு இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்ட 4.4 மில்லியன் மெற்றிக்தொன் நெல் உற்பத்தியில் 1.1 மில்லியன் மெற்றிக்தொன் நெல் கிழக்கு மாகாணத்தில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது. அடுத்ததாக மீன்பிடித்துறையினை நோக்குகின்ற போது நாட்டினுடைய மீன்பிடியின் மொத்த உற்பத்தியில் 20வீதம் உற்பத்தி கிழக்கு மாகாணத்தில் இருந்தே கிடைப்பதாக கூறப்பட்டுள்ளது.

இலங்கை முழுவதிலும் உள்ள கிராமப் பகுதிகள் அரசியல் கொள்கை வகுப்பாளர்களினால் ஆரம்பகாலம் தொடக்கம் தொடர்ச்சியாக ஒதுக்குதல்களுக்கு உட்படுத்தப்பட்டு வந்துள்ளன, வருகின்றன. எனினும் ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிட்டு நோக்குகின்ற பொழுது கிழக்கினுடைய நிலை என்பது பொருளாதார ரீதியாகவும் அபிவிருத்தி ரீதியாகவும் மோசமான நிலையில் இருப்பதென்பது கவலைக்குரிய விடயமாகும். நவீனமயப்படுத்தப்பட்ட வீதிகளும், உணவு விடுதிகளும், நவீன பல்பொருள் அங்காடிகளும், வணிகவங்கிகளும், வர்த்தக முதலீட்டு நிதிநிறுவனங்களும் தோற்றம் பெறுவது என்பது மாத்திரம் நிலையான அபிவிருத்தியோ, முன்னேற்றமோ அல்ல. மாறாக மக்களுடையதும், விவசாயிகள், மீனவர்கள் அனைவருடையதும் வாழ்வாதார, பொருளாதார அடிப்படையிலான உட்கட்டமைப்பு மற்றும் வாழ்வியல் மேம்பாடு என்பவையும், தனிமனித அபிவிருத்தி தொடர்பான தேவைகளும் அபிலாசைகளும் எப்பொழுது பூர்த்தி செய்யப்படும் வகையில் முழுமையான நிலையான அபிவிருத்தி மேற்கொள்ளபடுகிறதோ! அதுவே உண்மையான அபிவிருத்தியாகும்.

இலங்கையினுடைய பொருளாதார உற்பத்தியில் குறிப்பிட்ட அளவில் பங்குவகிக்கின்ற அரிசி, பால், மீன் ஆகியவற்றை உற்பத்தி செய்கின்ற பிராந்தியமொன்று அதிகமான வறுமையையும் போசாக்கு குறைபாட்டினையும் கொண்டிருப்பது என்பது ஏற்றுகொள்ள முடியாத விடயமாகும். இவற்றுடன் அரசினுடைய வீட்டு வருமானம் மற்றும் செலவுக்கணக்கெடுப்பு 2016 இன் படி கிழக்கு மாகாணத்தினுடைய வறுமையின் அளவு 7.3 சதவீதமாக காணப்படுவதோடு குறிப்பாக மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களில் வறுமையின் அளவு 11.3சதவீதம் 10சதவீதம் என்ற வகையிலாக காணப்படுகின்றது.

இவற்றுடன் பாடசாலை செல்லாத சிறுவர்கள், மந்த போசணையுள்ளோர்கள் என்பவற்றின் அளவு அதிகமாக காணப்படுவதும் இப் பிரதேசத்திலேயே ஆகும். அத்துடன் மட்டக்களப்பின் மேற்குப்பிரதேசத்தில் அமைந்துள்ள படுவான்கரை பகுதியில் ஆறு பிரதேச செயலகப்பிரிவுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இந்த பிராந்தியங்களிலேயே பாடசாலை கல்வியை இடை நிறுத்திய மாணவர்களுள் மந்தபோசணை பிரச்சனை அதிகமாக காணப்படுகின்றது. கிழக்கு மாகாணத்தினை பொறுத்தவரையில் 2007ம் ஆண்டு போர் முடிவடைந்த நிலையில் போரும் போருக்குப்பின்னரான பாதிப்பு நிலமைகளும் மீள்குடியமர்வு செயற்பாடுகளும் சமூக அபிவிருத்தி தொடர்பான முன்னேற்றங்களும் முழுமையான வகையில் பூர்த்திசெய்யபடவில்லை எனலாம்.

தற்கால இளையயோர் சமூகமானது ஆரோக்கியமானதும் முன்னேற்றகரமான சூழலிலும் தமது பயணத்தை ஒரு புறமாக முன்னெடுத்து வருகின்ற போதிலும் உலகமயமாதலில் தாக்கமும் பிழையான நெறிபிறழ்வான வாழ்வியல் உந்தல்களுக்கூடாகவும் இளையோர் சமூகம் பயணிப்பதென்பது மறுக்கமுடியாத ஒன்றேயாகும்.

இவ்வாறான பிரச்சினைகளை எவ்வாறு ஆரோக்கியமான வகையில் கையாள்வது என்பதும், இவற்றுக்கான முறையான வழிப்படுத்தல்களும், ஆற்றுப்படுத்தல்களும், உளவியல் ஆற்றுபடுத்தல் திட்டங்களும் பரவலாக முன்னேடுக்கப்படுகின்ற பொழுதும் அது 'நத்தை வேகத்திலேயே' முன்னெடுக்கப்படுவது கவலைக்குரிய விடயமாகும். ஊருக்குள் திடீரென அறிமுகப்படுத்தபடும் கடன் திட்டங்கள் தொடர்பான முறையான விழிப்புணர்வும், தெளிவுபடுத்தலும் மக்களுக்கு வழங்கப்படும் முறையான செயற்பாடுகள் இடம்பெறவேண்டும். அத்துடன் கடன் தொடர்பான ஒப்பந்த படிவங்கள், அதில் கையெழுத்திடுதல் கடன் திட்டங்கள் மற்றும் சாதக பாதகங்கள், அவற்றின் விதிகள், நிபந்தனைகள் என்பன பற்றிய தெளிவான கருத்தியல் மக்கள் மத்தியில் விதைக்கப்படவேண்டும்.

இவற்றுடன் பாடசாலைகளிலும், ஏனைய அரச நிறுவனங்கள் மற்றும் திணைக்களங்களிலும் முறையாக பயிற்றுவிக்கப்பட்ட பயிற்சிபெற்ற அனுபவம் மிக்க 'உளவளத்துணையாளர்கள்' நியமிக்கப்பட வேண்டியது கட்டாயத் தேவையாக கிழக்கு மாகாணத்தில் உருவெடுத்துள்ளதாக புத்திஜீவிகள் தெரிவிக்கின்றனர்.

மனிதன் என்பவன் தான், தன்னை சுற்றியுள்ள சூழல், அதிலுள்ள சக மனிதர்கள், தனது சமூகம் என்பவை மீதான கரிசனையும் அக்கறையும் கொள்வதோடு சுயநலமானதும் தான்தோன்றித்தனமான செயற்பாடுகளில் ஈடுபடுவதை கைவிடுகின்ற பொழுதில் மாத்திரமே ஆரோக்கியமான மனித சமூதாயத்தினையும் மனோதிடம் மிக்க எதிர்கால சந்ததினரையும் உருவாக்க முடியும்.

தற்கொலை என்பதும் அவை சம்பந்தமான எண்ணப்பாடுகளும் மாற்றப்பட வேண்டுமெனின் பலமானதும் திடமானதுமான மன வலுப்படுத்தல்களும், உளவள ஆலோசனைகளும், பாரம்பரிய கலைகள், பண்பாடுகளிலும் ஆக்கபூர்வமான விடயங்களிலும் இளையோரை ஈடுபடுத்துவதன் ஊடாகவும் நிலைபேறானதும் முன்னேற்றகரமானதுமான உட்கட்டமைப்பு, வாழ்வாதார அபிருத்தி ஏற்படுத்தப்பட்டு மக்களின் வாழ்க்கைத்தரும் உயர்த்தபடுவதனூடாகவும் போதைப் பொருளற்ற சமூகத்தின் உருவாக்கத்தின் ஊடாகவும் தற்கொலைகள் அற்ற சுபீட்சமான கிழக்கினை கட்டியெழுப்பமுடியும்.

# அரங்கத்தின் பெண்கள் கால்பந்து

அரங்கம் நிறுவனம் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்துடனும் மகளிர் அமைப்புக்களுடனும் இணைந்து சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு மட்டுநகர் வெபர் அரங்கில் பெண்களுக்கான கால்பந்து போட்டி ஒன்றை கடந்த திங்களன்று மாலை நடத்தியது.

மட்டக்களப்பின் சிறந்த மகளிர் கால்பந்து அணிகளான அம்பிளந்துறை கலைமகள் மகாவித்தியாலயம் மற்றும் பன்சேனை பாரி வித்தியாலயம் ஆகியவற்றின் அணிகள் இந்தப் போட்டியில் மோதின.

அடுத்து வருகின்ற 3 வருடங்களுக்கு இந்த இரு அணிகளுக்கான அனுசரணையை அரங்கம் நிறுவனம் ஏற்பதற்கான ஒரு ஆரம்ப நிகழ்வாகவும் இது ஏற்பாடு செய்யப்பட்டது.

அதற்கமைவாக மட்டக்களப்பு ஆனைப்பந்தி இந்து மகளிர் கல்லூரி மற்றும் அருணோதயா வித்தியாலயம் ஆகியவற்றின் மாணவிகள் மற்றும் பாண்ட் வாத்தியக் குழுவினர் ஆகியோரின் வரவேற்பு படுவான்கரையின் விளையாட்டு வீராங்கனைகளுக்கு வழங்கப்பட்டது.

மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுதர்சனி சிறிகாந்தா மற்றும் மேலதிக அரசாங்க அதிபர்(காணி) திருமதி நவரூபரஞ்சனி முகுந்தன் ஆகியோர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சிக்கான முக்கிய ஏற்பாடுகளை மாவட்ட விளையாட்டு அதிகாரியான வேலுப்பிள்ளை ஈஸ்வரன் மேற்கொண்டிருந்தார். அதிதியாக மாநகர துணை முதல்வர் க.சத்தியசீலன் கலந்துகொண்டார்.

இந்த நிகழ்வின் மிகச்சிறப்பான அம்சம் இந்த இரு அணிகளின் ஆட்டம். மிகச் சிறந்த தொழிர்சார் அணிகள் அல்லது தேசிய தெரிவு அணிகளுக்கு நிகரான ஆட்டத்தை இரு அணிகளிடமும் காணக்கூடியதாக இருந்தது.

ஆட்ட இறுதிவரை ஒருவருக்கு ஒருவர் சளைக்காதவர்களாக இரு அணிகளைச் சேர்ந்த பெண்களும் ஆடினார்கள். ஆட்டத்தில் இரு கோல்களை பன்சேனை அணி போட்டு வெற்றி பெற்றது.

பார்வையாளர்களைப் பொறுத்தவரை, அங்கு கூடிய பலருக்கு “பெண்கள் கால்பந்து” என்பது புதிது. இப்படி ஒரு ஆட்டத்தை அவர்கள் காண்பது முதல் தடவை. ஆனால், இந்த படுவான்கரைப் பெண்களின் கால்பந்து ஆட்டம் அனைவரையும் கட்டிப்போட்டு வைத்திருந்தது.

இரு அணிகளும் போக வேண்டிய தூரம் நீண்டது. அவர்களுக்கு அரங்கத்தின் வாழ்த்துக்கள்.






## மட்டுநகரின் உதைபந்தாட்ட அரங்கை அதிரச் செய்த அம்பிளாந்துறை மற்றும் பன்சேனைக் கிராமங்கள்















## படுவான்கரை வீராங்கனைகளின் சொந்த மைதானமாகிய மட்டுநகர் வெபர் அரங்கு








நோர்வே ஒஸ்லோவை சேர்ந்த விஜயாநந்தன், சுகிர்தா தம்பதிகளின் புதல்வன் கார்த்திக் 17.03.2019 அன்று தனது நான்காவது பிறந்தநாளை கொண்டாடினார். இவரை அம்மா, அப்பா, சகோதரிகள், தாத்தாமார், ஆச்சிமார், பெரிய ஆச்சி, மாமாமார், மாமிமார், மச்சான்மார், மற்றும் உற்றார் உறவினர்கள் அனைவரும் சீரும் சிறப்புடனும் பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் நீடூழி வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

# மட்டக்களப்பில் கோவில்களிலும் வீடுகளைலும் நிகழும் சடங்குகள் சங்ககால வழிபாட்டின் நின்று நிலவும் இன்றைய வடிவங்கள்

## வியப்பிலாழ்த்தும் மட்டக்களப்பு ஆகமம் சாரா தெய்வ வழிபாட்டுமுறைகளும் சடங்குகளும் 20

--- பேராசிரியர் சி. மௌனகுரு ---



இவ்வண்ணம் வீட்டில் சடங்கு நடைபெறுகையில் சொந்தக்காரர், அயலார் யாவரையும் வீட்டுக்காரர் அழைத்திருப்பார்.

இங்கு பார்வையாளர் மத்தியிலேதான் இச்சடங்கு நடைபெறுகிறது. அத்துடன் நிறைந்த உரையாடல் தன்மையுடையதாக இச்சடங்கு அமைந்திருப்பதையும் அவதானிக்குக. வளர்ச்சியடைந்த கூத்திலே அண்ணாவியார் பாத்திரத்துடன் உரையாடுவது போல, வடமொழி நாடகங்களில் விதுரஷகன் அல்லது சூத்திரதாரன் பாத்திரங்களுடன் உரையாடுவது போல இங்கும் தெய்வம் ஏறிய ஒருவருடன் தெய்வத்துடன் உரையாடுவது போல பூசாரி உரையாடுகிறார்.

பூசாரி பாத்திரமே வளர்ச்சிப் போக்கில் அண்ணாவியாராக முகிழ்ந்திருக்க வேண்டும் என்பதனை இது சுட்டுகிறது. மட்டக்களப்பில் இன்று இவ்வண்ணம் நடைபெறும் சிறு தெய்வ வணக்கங்களின் மூலத்தினை நாம் சங்க இலக்கியங்களில் வரும் வெறியாட்டில் காண முடிகிறது. அங்கும் தமிழருடைய வழிபாட்டிலே வெறியாட்டு முதலிய ஆட்டங்கள் முக்கிய இடம்பெற்றன.

முருக வழிபாடு கூறும் இடங்களில் இத்தகைய கூத்துக்கள் வர்ணிக்கப்படுகின்றன. இவ்வழிபாடுகளில் பூசாரிகள் இல்லை. இறைவன் தம்மிலே வந்து வெளிப்படுவான் என்ற நம்பிக்கையுடன் கூத்தாடினர். தலைவிக்கு ஏற்பட்ட நோய் தீர்க்கும் பொருட்டே இவ்வாட்டு நடைபெற்றது.

“வெறியாடும்போது கழற்காயை மெய்யிலனிந்து படிமக் கலத்தைத் தூக்கிக் கொண்டு முருகணங்கின் குறையென வேலன் கூறுவான். கழங்கு பார்த்தல், நெற்குறி பார்த்தல் போன்றது. அது வெறிக்களத்தில் பரப்பிவிட்டுப் பார்க்கும்போது மூன்றும் இரண்டும் ஒன்றும் படுகை. இவ்வாறு படின் முருகணங்கினால் ஆயிற்று எனக் கொள்வர்.”* வேலன் ஆடும் ஆட்டம் பாம்பின் ஆட்டத்திற்கு ஒப்பிடப்படுகிறது.

சிறிய ஆட்டுக்குட்டியைக் கொன்று அதன் இரத்தத்தில் தினையைப் புரட்டி எடுத்து வேலனுக்குப் படைப்பார்கள்."

மேற்குறிப்பிட்ட அம்சங்கள் பல மட்டக்களப்பிலுள்ள சிறுதெய்வ வணக்க முறைகளுள் உள்ளன. நோய் தீர்ப்பதற்காகவே இங்கு தெய்வம் ஏறி ஆடப்படுகிறது. ஆட்டம் சங்ககால இலக்கியம் கூறுவது போல அழகான ஆட்டமாக அமைகின்றது. அங்கு பாவித்ததைப் போன்று இங்கு பின்னணி வாத்தியங்கள் பாவிக்கப்படுகின்றன. ஆடுவெட்டிப் பலியிடுவது போல இங்கு ஆடும், கோழியும் வெட்டிப்பலியிடுவது நடைபெறுகிறது.

கழங்கு பார்த்தல்போல இங்கு வெற்றிலை எறிந்து நோயின் தன்மை அறியும் முறை ஆடுபவரால் மேற்கொள்ளப்படுகிறது.

ஆனால் சங்க இலக்கியங்களிலே வேலனே பூசாரியாகவும் இருந்தான். இங்கு பூசாரி வேறு, ஆடுபவன் வேறாக இருக்கிறான். இது அதினின்றும் பெற்ற ஒரு வளர்ச்சி எனலாம்.

இத்தகைய ஆட்டம் பொருந்திய வணக்க முறைகளைக் கேரளப் பகுதியிலும் காண முடிகிறது.

அங்கு மலையன் எனப்படும் சாதியினரின் முக்கிய தொழிலே மந்திர வித்தைகள் தான் என்பார் தேஸ்டன். அதே கொச்சின் பகுதியில் வாழ்கின்ற வேலன் சாதியினரைக் தேஸ்டன் பேய் ஆட்டக்காரர் எனவும் எனவும் வைத்தியர்கள் எனவும் கூறுவர்.




மக்களுக்கு வரும் நோய்கட்குக் காரணம் துட்டப்பிசாசுகளின் சேட்டைதான் என்பது இம்மந்திரக்காரர்களின் முடிவு.

இவர்களைப் போலவே மட்டக்களப்பில் வதியும் சில மந்திரக்காரர்கள் சில குறிப்பிட்ட சாதியினரைச் சார்ந்தவராயும், நோய் தீர்ப்பவர்களாயும் உள்ளனர்.

இத்தகைய நம்பிக்கைகள் பிராமணரல்லாத சாதியினரிடையே தான் காணப்படுகிறது என்பர் கா. சிவத்தம்பி.[o]

மட்டக்களப்பிலும் இத்தகைய நம்பிக்கைகள் பிராமணரல்லாதவரிடம் தான் காணப்படுகிறது.

சிலப்பதிகாரத்தில் வரும் வேட்டுவவரியுடனும் மட்டக்களப்புச் சடங்கு முறைகள் ஒப்பிடற்குரியவை.

வேட்டுவவரியில் அச்சமூகத்தின் பூசாரியாகவுள்ள சாலினி என்பார் கடவுளானவர் நேர்த்திக்கடன் செலுத்தாமை பற்றிக் கோபித்திருப்பதாக மன்றிலே கூறுகிறாள். அதன் பின்னர் குலக்குழுவிலுள்ள பெயர் பெற்ற குடும்பத்தில் உள்ள கன்னிப் பெண்களைத் தெய்வம்போல உடுத்தி அவள் முன்னிலையிற் பலி வழங்கப்படுகிறது. பின்னர் கொற்றவை குமரி கோயிலுக்கு ஊர்வலமாக எடுத்து வரப்படுகிறாள். கொண்டுவந்த பலிகளை பீடத்தில் வைத்து பின்னர் பலவித வாத்தியங்களை ஒலித்து அப்பெண்ணைத் தெய்வமான நிலைக்கு கொண்டுவருகின்றனர். பின்னர் ஆடலும், பாடலும் நடைபெறுகின்றன.[o] இத்தகைய ஆட்டத்தின் இன்றைய எச்சமாக கேரளத்தின் வடக்குப் பகுதியில் நடைபெறும் திரையாட்டத்தைக் குறிப்பிடுவர். கா. சிவத்தம்பி.* பகவதிக்கு ஒருவர் அலங்கரிக்கப்பட்டு இச்சடங்கு நடைபெறும். இதேமுறையில் நடைபெறாவிடினும் மாரி அம்மன்,காளி அம்மன், பகவதி அம்மன் ஆகிய பெண் தெய்வங்கள் மனிதரில் உருவாகி ஆடுவதும் அவர்கள் சிற்சில வேளைகளில் பெண்போல உருவம் எடுத்துக் கொள்வதும் அவர்களை மக்கள் ‘சாமி என்று அழைப்பதும் மட்டக்களப்பு மரபு.


காளியோ, மாரியோ பிடித்து ஆடும் ஒருவன் அவர் பெயரைக் கூறாது ஆட்டம் முடியும்வரையும் தெய்வத்தின் பெயரால் அழைப்பது இங்கு கவனித்தற்குரியது.

அன்றியும் மட்டக்களப்பு பகுதியில் சமூகத்தில் அவர் எந்தப் பொருளாதாரத் தளத்திலிருப்பிலும் சடங்கு நாட்களில் மாரி, காளி பிடித்து ஆடுபவனைச் சில நேரங்களில் தெய்வமாகப் பாவித்து வணங்கும் வழக்கமும் காணப்படுகிறது.

இவை யாவும் பண்டைய தமிழ் மக்களின் சடங்கு முறைகளின் எச்சசொச்சங்கள் இன்றும் மட்டக்களப்பில் நிலவுகின்றன என்பதற்கான ஆதாரங்களாகும்.

# அம்மை நோயின் பின்னணி

எமது சமூக கலாசாரத்தில் நாம் அம்மை நோயின் மூலம் இந்துதெய்வமான அம்மாள் எமது உடலில் வந்து 7 நாட்களுக்கு தங்கியிருந்து செல்வதாகவும் தெய்வத்தின் கோபத்தின் காரணமாகத்தான் அம்மை நோய் வருகின்றது என்றும், மருந்து மாத்திரைகள் கொடுத்தால் மேலும் கோபத்திற்கு உள்ளாவர் என்றும் அம்மாள் கேட்பதை எல்லாம்செய்து தெய்வத்தின் கோபத்தை குறைப்பதுதான் ஒரே வழி என்றும்வழிவழியாகச் செய்து வருகின்றோம்.



பண்டையகால நூலான 'தேவி மகாத்மியத்தில்' அம்மை நோயைப் பற்றிக் கூறுகையில் ஜீவாரசூரா என்னும் அசுரன்தான்ஒரு கொடியவகை நோயைப் பரப்பி மக்களைகொலை செய்வதாவும். பார்வதிதேவி, கார்த்தியாயினி வடிவத்தைப் பெற்று அந்த அசுரனைக்கொன்றதுடன் பாதிக்கப்பட்ட மக்களை தன்னுள் ஏற்றுக்கொண்டாள். எனவே இரத்தவதி (இரத்த தொற்றுக்களின் தேவி) என்று அழைக்கப்படுகின்றாள். அவள்தான் இரத்தத்தை தூய்மைப்படுத்தி நோயைப் போக்குகின்றாள் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அம்மை நோயை விஞ்ஞான ரீதியில் பார்த்தால் இது காற்று வழியாக பரவும் ஒரு நோய் . இது உடல் தோலில் ஒவ்வாமையை ஏற்படுத்தி, கொப்பளங்கள், சிவந்த பருக்கள்என்பவற்றுடன் அரிப்பையும் உருவாக்கும். எமது உடலில் காணப்படும்நிர்ப்பீடனம் (நோய் எதிர்ப்பு) இதை எதிர்த்துப் போராடும் போது காய்ச்சல், தலைவலி ஏற்படும். இது சாதாரணமாக 6-10 நாட்களில் அகன்றுவிடும். சிலவேளைகளில் 21நாட்களுக்குக்கூட இது நீடிக்கலாம். அது ஒவ்வொருவரின் நோய் எதிர்ப்புப் தன்மையை பொறுத்தது. இந்த நோய் பெரும்பாலும் வியர்செல்லாசோஸ்டர் வைரஸ்சினால் ; (Varicella Zoster Virus(VZV)) உருவாக்கப்படுகின்றது. இது மார்ச் மற்றும் ஏப்பிரல் போன்ற சூடான மாதங்களில் தான் அதிகம் பரவுகின்றது.

எமது பாரம்பரியமான முறையில்



- வழிபாட்டு விளக்குகளை எரிய விடுவது தவிர்க்கப்பட வேண்டும்.
- வேப்பிலைகளை நுழைவாயிலிலும் வீடு முழுவதிலும் நோயாளியின் படுக்கையிலும் பரவ வேண்டும்.
- நோயாளியின் தலைக்கு அருகில் தண்ணீர்க் குடம் இருக்க வேண்டும்.
- குளியல் மற்றும் வறுத்த, பொரித்த, எண்ணெய் உணவு வகைகளை 07 நாட்களுக்குத் தவிர்க்க வேண்டும்.
- பொரியல் பொரிக்கக்கூடாது

போன்ற சம்பிரதாயங்களை நாம் பின்பற்றுகின்றோம். இதை நாம் ஆராய்ந்து பார்த்தால், எமது பாரம்பரிய முறையும்கூட

விஞ்ஞான ரீதியாகத்தான் செய்யப் படுகின்றது என்பதுஆச்சரியத்துக்குரிய விடயம்தான்.

விளக்கு எரிய விடுவதன் மூலம் ஏற்படும் புகை, அரிப்பை ஏற்படுத்தும், அத்தோடு இவ்வகையான வைரஸ் சிறிதளவு வெப்பத்திலும் அதிகம் பரவக் கூடியது. அதேவேளை வேப்பிலையின் குணாதிசயமானது கிருமி எதிர்ப்பு சக்தி மற்றும் பூச்சிகள், நுளம்புகள் வராமல் தடுக்கும் ஆற்றல் உடையது. எனவேதான் வாசலில் நாம் வேப்பிலை கட்டுகின்றோம். வீட்டிற்கு வருவபர்களுக்குகூட ஒரு எச்சரிக்கையாக இந்த வேப்பிலை விளங்குகின்றது. இவ்வகையாக வைரஸ்

லியோண்


கல்லீரலையும் , கல்லீரல் செயற்பாட்டையும் பாதிக்கும் என்பதாலும் இந்த வைரஸ் தாக்கத்தின் போது செரிமானத் தன்மை உடலில் குறைந்து காணப்படுவதாலும் தான் எண்ணெய் உணவு வகைகள் தவிர்க்கப்படுகின்றன. அதேவேளை எண்ணெய் உணவு தயாரிக்கும் போது உருவாகும் புகைமணம்(எண்ணெய்த் தன்மை) காற்றில் பரவுவதும் வைரஸ்சின் தாக்கத்தை அதிகரிக்கும். தண்ணீர்க்குடம் வைப்பது நோயாளிஎழுந்து வீட்டுக்குள் உலாவுவதை தவிர்ப்பதுடன் வைரஸ் தொற்று மற்றவர்களுக்கும் பரவுவதை தவிர்ப்பதற்காக குளிப்பதால் வைரஸ் அதிகம் பரவ வழிவகுக்கும். அத்தோடு அதிகம் அரிப்பை ஏற்படுத்தும்.

எது எவ்வாறாயினும் எமது முன்னோர்கள் செய்து வந்த ஒவ்வொருவிடயத்திலும், அறிவியலும் , விஞ்ஞானமும் கலந்துள்ளது என்பது மறுக்க முடியாத உண்மை.



# பாடசாலையில் கற்றலுக்கான தகவல் வள நிலையமும்; அதன் அவசியமும்

## பள்ளிக்கூட நூலகங்களின் பங்களிப்பு



மனித வாழ்க்கையில் நூலகங்களின் முக்கியத்துவம் என்றும் பேசக்கூடிய ஒன்றாக காணப்படுகின்றது. 'Libar' என்ற இலத்தீன் மொழிச் சொல்லிலிருந்தே 'Library' என்ற சொல் உருவாக்கப்பட்டது. 'லிபர்' எனும் இச்சொல்லுக்கு 'நூற்றொகுதி' என்பது பொருளாகும். இது காலப்போக்கில் மாற்றமடைந்து சீன மொழியில் 'ஒளித்து வைத்திருக்கும் இடம்' எனப் பயன்படுத்தப்பட்டது. இச்சொல் ஆங்கிலத்தில் Library என உச்சரிக்கப்பட்டு உலகம் பூராகவும் பேசப்பட்டு வருகின்றது.

சர்வதேச ரீதியில் நூலகவியலின் ஐந்து விதிகளை இந்திய நூலகவியலின் தந்தை எஸ்.ஆர்.ரங்கநாதன் 1931 ஆம் ஆண்டு, நூலக முறைமை ஒன்றை இயக்குவதற்கான கொள்கைகளாக முன்மொழிந்தார். இதனையே உலகம் முழுவதிலும் உள்ள பல நூலகர்கள் தமது கொள்கைகளுக்கு அடிப்படையாகக் கொண்டுள்ளனர்.

### இந்த ஐந்து விதிகளும் வருமாறு,

1. நூல்கள் பயன்பாட்டுக்கானவை.
2. ஒவ்வொரு வாசகருக்கும் அவரது நூல்
3. ஒவ்வொரு நூலுக்கும் அதன் வாசகர்
4. வாசகருடைய நேரத்தைச் சேமிக்க வேண்டும்
5. நூலகம் ஒரு வளரும் உயிரினம் என்பவையேயாகும்.

இந்த ஐந்து விதிகளும் ஒவ்வொரு நூலகத்திலும் கடைப்பிடிக்கபடுமாயின் அதன் செயற்பாடுகளும் பயனுறுதி மிக்கதாக அமையும்.

'இன்றைய உலகில் ஒரு மனிதன் காலத்தோடு ஒன்றியவனாக இருக்க வேண்டுமென்றால், அவன் நாளாந்தம் குறைந்தது நான்கு புதினப் பத்திரிகைகளையும், வாராந்தம் இரண்டு வார சஞ்சிகைகளையும், மாதாந்தம் ஒரு மாத வெளியீட்டையும் வாசிக்க வேண்டும்' என்று இலங்கையின் புகழ்மிக்க விஞ்ஞானி டாக்டர் ஆர்தர் சி கிளாக் கூறுகின்றார்.

அந்தவகையில், தம் வீட்டுச்சூழலில் இருந்து வெளியுலகுக்கு குழந்தை பிரவேசிக்கும் முதலாவது இடமாக பாடசாலைகள் இருப்பதனால் குழந்தையின் வாசிப்புப் பழக்கத்துக்கு அடித்தளம் போடும் நல்ல வாய்ப்பு பாடசாலை நூலகத்துக்கு கிடைக்கின்றது. நூலக சேவையற்ற கல்வி என்பது ஆன்மா இல்லாத உடலுக்கு ஒப்பானது எனலாம். நாட்டின் எதிர்காலம் ஒப்படைக்கப்பட்டிருப்பது இன்றைய குழந்தைகளிடமே என்பது உண்மையானால் அந்தக் குழந்தைகளின் உள்ளத்தை கிட்டத்தட்ட 13 வருடங்கள் பண்படுத்தும் பாரிய கடமைப்பாட்டில் இருப்பவை பாடசாலைகள் ஆகும். கல்விச் சமூகம் என்ற தளத்திற்கு அப்பால் கற்கும் ஆற்றலுடைய அறிவுச் சமூகம் என்ற புதிய செல்நெறியினை தோற்றுவிக்கும் கருவறைகளாக இன்றைய பாடசாலையில் கற்றலுக்கான வளநிலையங்கள் செயற்பட வேண்டிய தேவை உணரப்பட்டுள்ளது. ஆளுமை மிக்க பொதுச் சமூகக் கட்டுமானத்தை தோற்றுவித்து மாணவர்களை வாழ்க்கையில் சுயசிந்தனையாளர்களாகவும் படைப்பாளிகளாகவும் இவை மாற்றியமைக்க வல்லன.

எனவேதான் பாடசாலைகளின் கற்றல் இலக்குகளையும் அவற்றின் நோக்கங்களையும் அடைந்து கொள்வதில் பாடசாலை நூலகக் கற்றல் வள நிலையம் முக்கிய அங்கம் என்பதை உணர்ந்து, 2003 ஆம் ஆண்டிலிருந்து இவ்வள நிலையங்களை உயர் கல்வி அமைச்சு அங்கீகரித்துள்ளது.

தற்கால மாறுபட்ட கல்விச் சூழலுக்கேற்ற விதத்தில் பொருத்தமான கற்றல் வள சாதனங்களை இனங்கண்டு அவற்றை பகுப்பாய்வு செய்து பாடத்திட்ட அமைப்பினுள் அடங்கும் வகையில் அவற்றினை ஒழுங்கமைத்தல் ஆசிரிய நூலகர் ஒருவரின் பிரதான கடமையாகும். கல்வித்துறையிலும் தகவல் நிர்வாகத்துறையிலும் ஒருங்கிணைக்கப்பட்ட அறிவினை பெற்று சிறந்த கல்வியியலாளராகவும், தகவல் நிர்வாகியாகவும் செயற்படுவதனூடே பாடத்திட்டம் பற்றிய அறிவு கற்பித்தல் தந்துரோபாயங்கள் என்பன கற்றல்

ம.பானுரம்யா
கிழக்குப் பல்கலைக்கழகம்
விடுகை வருடம்

வளங்கள் பற்றிய அறிவு தகவல் பெற்றுக் கொள்ளும் முறைகள் என்பவற்றுடன் இணைக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் பாடத்திட்டத்தை வடிவமைத்தல், ஆதாரப்படுத்தல், அமுல்படுத்தல் போன்றவற்றில் ஒரு ஆசிரிய நூலகரின் செயல்திறன் மிக்க பணி கற்றலையும் தகவல்களையம் இணைக்கும் செயல் நெறியாகத் தொழிற்படுகிறது.

கற்றல் வள நிலையங்களின் முக்கிய நோக்கங்களில் சிறப்பானதொன்று மாணவர்களும் ஆசிரியர்களும் பாடசாலை கற்றல் கற்பித்தல் நுட்பங்களிலே அவற்றின் அனுபவங்களிலே பெறக்கூடிய தரத்தின்

தொடர்ச்சி... (பக்கம் -15 )

தொடர்ச்சி...

# 19 மார்ச்சில் கிழக்கை ஸ்தம்பிக்க வைத்தது ஏது?

இளைய பாராளுமன்றப் பிரதிநிதியான வியாழேந்திரன் அவர்கள் மக்கள் திரள் ஒண்றிணைதலைக் குறிப்பிட்டு கனல் கக்கும் உரையொன்றை ஊடகங்களில் நிகழ்த்தியிருந்தார்.

மக்கள் அரசினால் ஏமாற்றப்படுகின்றார்கள் என்ற கருத்து அவரது உரையின் முக்கிய குவி மையமாக இருந்தது. 'கிழக்கு மக்களின் பல பிரச்சனைகள் நல்லிணக்கம் என்ற பெயரில் தட்டிக் கழிப்பு' என வியாழேந்திரன் சாடுகிறார் என இன்றைய வீரகேசரி (21 மார்ச்) குறிப்பிட்டிருந்தது.

கொதிக்கும் வெயிலையும் பொருட்படுத்தாமல் வியர்வை வழிய, மனதில் வலியுடனும் வேதனையுடனும் கேள்விகளுடனும் நடந்த பெண்கள் அவர்களுக்கு ஆதரவாக நீண்ட காலமாக அவர்களுடன் வேலைசெய்யும் ஏனைய பெண்கள், சாதி, மத பேதங்களை மறந்து வலிந்து காணாமல்போனாரின் நினைவின் பாரங்களுடன் வந்தோர், நடந்தோர் ஐக்கிய நாடுகளின் பொதுச்சபை என்னவென்றோ, சர்வதேச விசாரணை என்றால் என்னவென்றோ அதன் நுணுக்கங்கள் புரியாமல், தெரியாமல் பத்திரிகையும் தொலைக்காட்சியும் இணையத்தளங்களும் உடனுக்குடன் சுடச்சுடப் போட்டிபோட்டுக் காட்டிய படங்கள் - அவற்றைப் பயன்படுத்தப்படப்போகும் விதம் பற்றிக் கவலைப்படாதோர் ஆகியோரை கடையடைப்புக்கும், அலுவலகங்கள் இயங்காமற்போனமைக்கும் பாடசாலைகள் மூடப்பட்டமைக்கும் காரணமாயினர்.

இந்த வருட தேர்தலை (மாகாண சபைத் தேர்தலையோ பாராளுமன்றத் தேர்தலையோ) மனதில் வைத்துக் கனல் பறக்கப் பேசிய அரசியல்வாதிகளோ மும்மதத் தலைவர்களிடமும் முதல் நாளே ஆசிவாங்கி மக்களின் நிழலில் வெயில் படாமல் நடந்தோரோ, புலம்பெயர்ந்து சென்ற தமது நாடுகளில் சகல சௌபாக்கியங்களுடனும் பிறந்த நாளும், ஹெலிக்கொப்டரில் வந்திறங்கும் மணமகன் மணமக்களைக் கொண்ட பணக்காரப் புலம்பெயர்ந்த தமிழர்கள் ஜெனிவாவுக்கு குளிர் குறைந்த செப்டம்பர் மாதத்தில் சைக்கிள் பிக்னிக் போபவர்களால் அல்ல, நேற்று அவர்கள் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் பக்க அறைகளில், நிகழ்ந்த கூட்டங்களில் நாடகம் நடத்தியோரால் அல்ல.

நேற்றைய தேசியப் பத்திரிகையான வீரகேசரி 'ஸ்தம்பித்தது கிழக்கு' எனத் தலைப்பிட்டு முதல் பக்கம் 19ஆம் திகதி நிகழ்வை விபரித்திருந்தது.

அந்த ஸ்தம்பிதம் மீண்டும் ஒருதரம் நான் மேலே குறிப்பட்ட உள்நாட்டு வெளிநாட்டு அரசியல் தொழில் முறைமையாளர்களால், (Political – Professionals) அரசியலைத் தமது வாழ்வாதாரமாக் கொண்ட நபர்களால் அடுத்த தேர்தலில் தமது வாக்கு வங்கிகளை நிரப்பத் திட்டமிடுவோரால் அவர்களது ஒழுங்கமைப்பில் வீதிக்கு வரத் தூண்டப்பட்ட மக்களால் கிழக்கு ஸ்தம்பித்தது. ஆனால் இந்த ஸ்தம்பிதம் ஏனைய மொழிப்பத்திரிகைகளிலோ இணையத்தளங்களிலோ காட்டப்படவில்லை. கொழும்பில் இருக்கும் அரச மையங்களுக்குப் போய்ச் சேரவில்லை.

நல்லாட்சி, நல்லிணக்கம் என நம்பி வாக்களித்த மக்கள் அடுத்த தேர்தலில் உங்களை நிராகரிப்பார்கள். ஆகவே ஒரு அரசியல் உறுதியுடன் செயற்படுங்கள் என்று எமது தமிழ்த் தலைமைகள் அவர்களுக்கு தொடர்ந்து உறுதிபடக் கூறவும் இல்லை. இவற்றையெல்லாம் நோக்கும் போது ஏமாறியது அரசாங்கம் மாத்திரமல்ல தமிழ்த் தலைவர்கள் எனக் கூறப்படுவோர் வெளிநாட்டிலும் உள்நாட்டிலும் தமிழ் மக்களின் மனித உரிமைகள், இடப்பெயர்வு, இராணுவத்தின் நில அபகரிப்பு, பெண்களின் வறுமை நிலை எனக் கூறுவோர் உண்மையில் மக்களுக்கு எதைச் செய்கிறார்கள் என்பது ஆழ்ந்த கரிசனைக்குரியது.

ஐரோப்பிய யூனியனின் கவனம் முழுவதும் Brexit – பிறக்சிட் தொடர்பாக இருக்கும், அமெரிக்காவோ இலங்கைப் பிரச்சனையிலிருந்து தள்ளியுள்ளது. இத்தகைய ஒரு பூகோள அரசியலில் ஈழப்பிரச்சினை முன்போல மையத்திற்கு வருமா? பொதுநல அமையத்தின் பொதுச் சபைக்கு எடுத்துச் செல்வது யார்? எப்படி எடுத்துச் செல்வது? இவையெல்லாம் ஆழமான கேள்விகள் - எடுத்துச் சென்றாலும் அது வெற்றிபெறுவதற்குறிய சாத்தியப்பாடு உள்ளதா?

இவைபற்றிய தகவல் எதையும் மக்களுக்கு அளிக்காமல் அவர்களை மீண்டும் ஒரு தரம் ஏமாற்றிமையே கிழக்கை ஸ்தம்பிக்க வைத்தது.



# விளையாட்டு

## கல்வியைப்போன்று விளையாட்டிலும் ஊக்குவிக்க பெற்றோர்கள் முன்வரவேண்டும்'



(காரைதீவு நிருபர் சகா)

தங்களது பிள்ளைகளுக்கு கல்வியை வழங்குவதில் பெற்றோர்கள் காட்டுகின்ற அக்கறையையும் ஊக்கத்தையும் விளையாட்டிலும் காட்டவேண்டும்.

இவ்வாறு காரைதீவு ஹொக்கி லயன்ஸ் கழகத்தின் ஐந்தாவது வருட நிறைவையொட்டி நடைபெற்ற பாராட்டுவிழாவில் உரையாற்றிய காரைதீவு பிரதேசசெயலாளர் வேதநாயகம் ஜெகதீசன் வேண்டுகோள் விடுத்தார்.

ஹொக்கி வீரர்கள் பாராட்டுவிழாவும் ஹொக்கி அகடமி அங்குரார்ப்பண விழாவும் நேற்று மாலை கழகத்தின் ஸ்தாபகரும் தலைவருமான தவராசா லவன் தலைமையில் காரைதீவு இ.கி.ச.பெண்கள் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.



பிரதம அதிதியாக காரைதீவு பிரதேச செலயாளர் வேதநாயகம் ஜெகதீசன் கலந்து சிறப்பிக்க, நட்சத்திர அதிதிகளாக திருக்கோவில் பிரதேசசெயலாளர் சிவ. ஜெகராஜன் ட்ரக்ஸ், அமைப்பின் தலைவர் எ.விவேகானந்தராஜா, பிரபல சட்டத்தரணி என்.சிவரஞ்சித், கல்முனை இளைஞர்சேனா தலைவர் எ.டிலாஞ்சன் ஆகியோர் கலந்துகொண்டுசிறப்பித்தனர்.

அங்கு ஜெகதீசன் மேலும் உரையாற்றுகையில்:
விளையாட்டுத்துறையால் உயர்தொழில் புரிகின்றவர்கள் எம்கண்முன்னே உள்ளனர். அதில் நிபுணத்துவம் வாய்ந்த மருத்துவர்கள், அதிகாரிகள் உள்ளனர்.

கல்வியைப்போன்றே சரிநிகராக விளையாட்டுத்துறையும் விளங்குகின்றது.

விளையாட்டினால் தேசிய சர்வதேச ரீதியில் புகழ்வாய்ந்தவர்கள் கிராமப்புறங்களில் சந்துபொந்துகளில் விளையாடியவர்களே.

லவன் கண்டி திரித்துவக்கல்லூரியில் பயின்றதொரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக்கொடுத்தது சுனாமி.

அவர் அங்கு பயின்ற விளையாட்டை இந்த மண்ணில் அறிமுகப்படுத்தி இன்று மாவட்ட மாகாண தேசிய ரீதியில் சாதனை படைத்திருப்பது கண்டு பாராட்டுகிறேன்.

இன்னும் 10 ஆண்டுகளில் இவர்கள் சர்வதேசத்திலும் சாதனை படைப்பார்கள் என்று நம்பலாம் என்றார்.

புதிதாக ஹொக்கி அகடமியொன்று அதிதிகளால் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது. விபுலாநந்தா சண்முகா மாணவர்களை இணைத்து இவ்அக்கடமி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நிகழ்வில் பாராட்டுரைகளை பிரதேசசெயலாளர் சிவ. ஜெகராஜன், உதவிக்கல்விப்பணிப்பாளர் வி.ரி. சகாதேவராஜா, சிரேஸ்ட சட்டத்தரணி என்.சிவரஞ்சித், ட்ரக்ஸ் அமைப்பின் செயலாளர் எஸ்.நந்தகுமார் ஆகியோரும் நிகழ்த்தினர்.

கழக ஆலோசகர்களான உதவிக்கல்விப்பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா, விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர் மா.சிதம்பரநாதன், மக்கள் வங்கி முகாமையாளர் தி.உமாசங்கரன் ஆகியோர் நினைவுச்சின்னம் வழங்கி பாராட்டிக்கௌரவிக்கப்பட்டனர்.

நிகழ்வில் பிரதான நன்கொடையாளர்களான ட்ரக்ஸ் அமைப்பின் தலைவர் எ.விவேகானந்தராஜா, செயலாளர் எஸ். நந்தகுமார், பொருளாளர் எம்.சுந்தரராஜன், மனிதஅபிவிருத்திதாபன கிழக்கிற்கான பணிப்பாளர் பி.ஸ்ரீகாந்த், சமுகசேவையாளர் கே.ரமணன் ஆகியோரும் சின்னங்கள் வழங்கிபாராட்டப்பட்டார்கள்.

விளையாட்டு உத்தியோகத்தர்களான பி. வசந்த் எல்.சுலக்சன் வி.பாஸ்கர் ஆகியோர் சின்னங்கள் வழங்கிப் பாராட்டப்பட்டனர்.

## மகளிர் எல்லே போட்டி ஏறாவூர் சம்பியன்



மட்டக்களப்பு மாவட்ட மட்ட பெண்களுக்கான எல்லோ போட்டியில் ஏறாவூர்ப்பற்று பிரதேசம் சார்பாக பங்குபற்றிய செங்கலடி கோல்ட் ஸ்டார் விளையாட்டுக் கழகம் சம்பியனாகியது.

மட்டக்களப்பு மாவட்ட மட்ட பெண்களுக்கான எல்லோ போட்டி புதன்கிழமை (20) மட்டக்களப்பு வெபர் விளையாட்டு அரங்கில் நடைபெற்றது.

ஏறாவூர்ப்பற்று பிரதேச அணிக்கும் கோறளைப்பற்று தெற்கு பிரதேச அணிக்குமிடையே நடைபெற்ற இறுதிப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற கோறளைப்பற்று தெற்கு பிரதேச அணி களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஏறாவூர்ப்பற்று பிரதேச அணி 30 பந்துகளுக்கு ஆறு ஓட்டங்களை பெற்றது. பதிலுக்கு துடுபெடுத்தாடிய கோறளைப்பற்று தெற்கு பிரதேச அணி 30 பந்துகளில் எதுவித ஓட்டங்களை பெறாத நிலையில் தோல்வியைத் தழுவிக்கொண்டது.

## இந்திய கிரிக்கட் வீரர் கோலி பற்றிய ஒரு முன்னாள் வீரரின் கருத்து



இந்திய அணியின் முன்னாள் கிரிக்கெட் வீரர் கௌதம் கம்பீர் விராட் கோலியின் அணித் தலைமை பண்பு குறித்து ஸ்டார் ஸ்போர்ட்ஸ் நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டபோது விரிவாக பேசியிருக்கிறார்.

ஐபிஎல்லில் கம்பீர் கொல்கத்தா அணிக்கு தலைமை தாங்கியபோது இரு முறை அந்த அணி கோப்பையை வென்றுள்ளது. கம்பீரை தவிர அதிக முறை ஐபிஎல் கோப்பையை வென்றவர்கள் ரோஹித்தும் தோனியும்தான்.

மகேந்திர சிங் தோனி அல்லது ரோஹித் ஷர்மாவை ஒப்பிடும்போது விராட் கோலி விவேகமான அணித்தலைவர் இல்லை என அந்த நிகழ்ச்சியில் பேசியதாக பிடிஐ செய்தி வெளியிட்டுள்ளது.

''நான் கோலியை விவேகமான அணித்தலைவராக பார்க்கவில்லை. ஆட்டதந்திரம் மிக்க அணித்தலைவராகவும் அவரை கருதவில்லை. அவர் இதுவரை ஐபிஎல்லில் கோப்பையை வெல்லவில்லை. ஒரு அணித்தலைவரை அவரது சாதனைகளை வைத்தே மதிப்பிட முடியும்"

விராட் கோலி தலைமையில் ஆஸ்திரேலிய மண்ணில் முதல் முறையாக இந்தியா டெஸ்ட் கிரிக்கெட்டில் கோப்பையை வென்றுள்ள நிலையில் கம்பீர் இத்தகைய கருத்தை தெரிவித்துள்ளார்.

"ரோகித் ஷர்மா மற்றும் தோனி ஆகியோர் மூன்று முறை ஐபிஎல் கோப்பையை வென்றுள்ளனர். அதனால் கோலி செல்ல வேண்டிய தூரம் நிறைய இருக்கிறது. கோலியை இப்போதைக்கு நீங்கள் தோனி, ரோகித்தோடெல்லாம் ஒப்பிடவே கூடாது" என கம்பீர் தெரிவித்துள்ளார்.

பக்க அனுசரணை : கோட்டைமுனை விளையாட்டுக் கழகம்

Koddamunai Sports Club
Batticaloa



# வன்முறைக்கு எதிராய் எழுந்த சூரியாவின் ''கூற்று''

நிலாந்தி சசிகுமார்

பெண்களின் தலைமைத்துவத்தில், பெண்களின் சிந்தனையில் , பெண்களின் செயற்பாட்டில், பெண்களுக்காக உருவாகி பல வருட சவால்களையும் ஊடறுத்து, பல தடைகளை உடைத்தெறிந்து, நீடித்து நிலைத்து ஆல விருட்சமாய் பரந்து கிடக்கும் சூரியா தனது 25 வருடப் பூர்த்தியை தொகுப்பாய் வெளியிட்டு அழகு பார்க்கிறது. வன்முறைக்கு எதிரான பெண்களின் கூற்றாய் நம் கைகளில் தவழ்கிறது இந்தக் “கூற்று”. இது ஒரு ஆவணப் பெட்டகம் என்று சொல்வதே சாலச் சிறந்தது.

மட்டக்களப்பின் பாய் பின்னும் கைவேலையை பிரதிபலிக்கும் விதத்தில் அருந்ததி ரட்ணராஜ் அவர்களால் வரையப்பட்ட பாய் ஓவியத்தின் அழகு நூலுக்கு வண்ணமூட்ட விரிகிறது அவர்களின் கூற்று.

ஒன்பது பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு அதனுள் சிறு சிறு கட்டுரைகளை உள்ளடக்கி அருமையாக வடிவமைக்கப்பட்டுள்ளது. பெண்கள் தமது சுய எண்ணங்களை செயற்படுத்தி அவற்றில் ஏற்பட்ட சவால்களையும் தடைகளையும் முகம் கொடுத்து வெற்றியீட்டி 25 வருடத்தை கடத்தியதும், யாருடைய இடையீடும் இல்லாது இத்தொகுப்பினை தொகுத்து வெளியிடுவதும் அவ்வளவு சுலபம் இல்லை.

அந்த வகையில் ஆசிரியர் பகுதியில் கூறுவது சித்ரலேகா மௌனகுரு அவர்கள் தொகுப்பின் பிறப்பு நிகழ்ந்த விதத்தைக் கூறுகிறார். அதனைத் தொடர்ந்து வரும் ஒன்பது பெரும் பகுதிகளுக்கும் அவர்கள் இட்ட தலைப்புகள் அபாரம்.

முதல் பகுதி “காலம்” என்ற தலைப்பில் பெண்களின் வரலாறு மற்றும் நினைவுகளினூடான பதிவுகள் பேசப்பட்டிருக்கின்றன. இப்பகுதியில் சித்ரலேகா மௌனகுரு 1975-2003 வரையான காலப்பகுதிகளில் பெண்களின் செயற்பாடுகளும் பெண்ணிலைவாதப் போக்கையும் அதில் அவரின் வகிபாகத்தையும் ஒடுக்குமுறைக் காலத்தில் உணர்வெழுச்சித் தருணங்களாக அனுபவ ரீதியில் பதிவிட்டிருந்தார்.


அத்துடன் சூரியாவின் பிறப்பு மற்றும் இடப்பெயர்வு, யுத்த சூழ்நிலையில் ஆயுதக் குழுக்களிடமிருந்து தப்பிப்பிழைக்கப்பட்ட பாட்டையும் எதிர் நோக்கிய சவால்களையும் இக்கட்டுரை பேசுகிறது.

மேலும், இக்கட்டுரையின் தொடர்ச்சியாக அமைந்த பேரழிவும் பெருந் தைரியமும் சரளா மற்றும் விஜயலெட்சுமி ஆகியோரால் 2004- 2016 வரையான காலப்பகுதியில் சூரியாவின் செயற்பாடுகள் குறித்துப் பதிவிடப்பட்டுள்ளது. அதில் யுத்தம் மற்றும் சுனாமியால் பாதிப்புக்குள்ளான பெண்களின் அபிவிருத்தி, யுத்தத்தில் பெண்களுக்கு நடந்த வன்முறைகள், பாலியல் வன்கொடுமைகள், அரசியலில் பெண்களின் வகிபாகம் என்பன அடக்கம்.

எல்லைகளை அகலித்தலுக்கு கலாசார செயல்வாதம் எனத் தலைப்பிட்டு இரண்டாம் பகுதி தொடர்கிறது. எமது கலாசாரக் குழுவின் பயணம் என்ற ஜெயந்தி தளையசிங்கத்தின் கட்டுரை கலாச்சாரக் குழு உருவான காலம் பற்றிப் பேசுகிறது.

அதேவேளை சூரியாவின் நீண்ட கால நோக்கமாக பெண்களுக்கு வலுவூட்டி ஆளுமைகளை கட்டியெழுப்புதல், அவர்களிடையே தலைமைத்துவத்தை உருவாக்குதல் , பெண்கள் உரிமைகள் என்பனவே இக்குழு உருவாகக் காரணம் எனவும் குறிப்பிடுகிறார்.

அடுத்து, கொதிநிலை தணிக்கும் ஊற்றாக அரங்கத்தைப் பார்க்கும் இந்தியாவைச் சேர்ந்த மங்கை, சூரியாவுடன் இணைந்தது தொடக்கம் தனது பயணத்தையும் தன்னால் மேற்கொள்ளப்பட்ட கலாசாரக் குழுக்களின் அளிக்கைகள் பற்றிக் கூறுகிறார். அவரது மட்டுநகர் கண்ணகிகள் நாடகம் மற்றும் அதில் வரும் கவிதைகள் குறித்தும் அவரது கட்டுரை அமைந்திருந்தது. இவரது மகளும் தற்போது சூரியாவுடன் இணைந்து அளிக்கைகள் செய்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. மங்கை தனது அனுபவப் பகிர்வில், போர்க்காலச்



சூழலிலும் நாங்கள் பயமின்றி எங்கள் அளிக்கைகளை மேற்கொண்டோம் என்கிறார். அளிக்கைகள் மேடை நாடகங்களாகவும் வீதி நாடகங்களாகவும் இருந்த போதிலும் அதில் பெண்களின் கவிதைகளைப் பயன்படுத்தி மக்களின் மனதில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் புதிய உத்தியை கைக்கொண்டது பாராட்டத்தக்கதாகும்.

அதனைத் தொடர்ந்து கலாசாரக்குழுவில் செயற்பட்ட இரு தலைமுறையைச் சேர்ந்த இலங்கேஸ்வரி மற்றும் கல்யாணியின் கலந்துரையாடல் அவர்களின் அளிக்கைகளில் அவர்கள் பெற்ற அனுபவங்களும் எதிர்கொண்ட சவால்களும் பற்றியதாக அமைந்தது. மூன்றாம் பகுதியை விஜயலட்சுமி சேகர் எழுதியிருந்தார். தெரிந்து கொள்ள, சிந்திக்க, மறுபரிசீலனை செய்ய என்ற தலைப்பில் சூரியாவின் எழுத்துலகைப் பற்றியும் பெண் சஞ்சிகை பற்றியும் குறிப்பிட்டிருந்தார். பெண்ணிலை அறிவை உருவாக்கலும் பகிர்தலுமே இதன் நோக்கம் எனக்கூறும் விஜயலட்சுமி பெண்களின் புதிய சிந்தனைகள், அவர்களின் ஆளுமை மற்றும் ஆற்றல்கள் வெளிப்படுத்தவும் நமது தேவைகள், கருத்துக்கள், உணர்வுகளை வெளிக்கொணர கவிதை, கதை, கட்டுரை, நாடகம் என்ற ஏதோவொரு எழுத்து வடிவத்தை பயன்படுத்த ஒரு தளமாக பெண் இருந்தது என்றும் கூறுகிறார்.அதேவேளை இ.வினிபிரட் ஜெயசாந்தினி பெட்டகமான நூலகத்தையும் ஆவணப்படுத்தலையும் விரிவாக எடுத்துரைக்கிறார். மிகச் சிறந்த நூலகம் ஒன்று சூரியாவால் பாதுகாக்கப்பட்டு வருவதை கூறும் இவர் “வாசிக்கும் ஆர்வம் கூடியவர்கள் பெண்களாயினும் குடும்பப் பொறுப்புகள் , வேலைப்பளு , நேரமின்மை காரணமாக ஒப்பீட்டளவில் குறைவாகவே காணப்படுகிறார்கள்” என வருந்துகிறார்

இத்தொகுப்பின் நான்காவது பகுதி

எனது வேலை

எனது நேரம்

எனது பெறுமதி என்பதாகும். இது பராமரிப்பு மற்றும் முறைசாராப் பொருளாதாரத்தில் பெண்களின் பங்கை அதிகரிக்கச் செய்தல் பற்றிய கட்டுரையாகும்.

முறைசாராப் பொருளாதாரம்,முறைசாரா தொழிலாளர்கள் பற்றி சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தின் ஆய்வுக் கட்டுரையாக இது அமைகிறது. யுத்தம் மற்றும் இயற்கை அனர்த்தங்கள் பெண்களை கடன் சுமைக்கும், தற்கொலைக்கும், முறைசாராத் தொழிலுக்கும் தள்ளியிருப்பது நிதர்சனம்.

அக்கட்டுரையைத் தொடர்ந்து அ. இலங்கேஸ்வரியினால் முறைசாராப் பொருளாதாரத்தில் உரிமை தொடர்பான எனது வேலையும் அனுபவங்களும் பகிரப்பட்டிருந்தன.

சமாதானம் எமக்குத் தரக் கூடியது என்ன? என்ற கேள்வியுடன் ஆரம்பிக்கும் சமாதானம் எமது நோக்கு என்ற ஐந்தாம் பகுதி யுத்த சூழலாகட்டும் அதன் பின்னரான காலமாகட்டும் பெண்களின் வாழ்வில் நிம்மதி அற்ற நிலையே காணப்படுகிறது என்று குறிப்பிடுவதுடன் சில புகைப்படங்களைக் காட்சிப் படுத்தி மனதில் நிலைக்கச் செய்கின்றன.

பெண்களுக்கும் சிறுமியருக்கும் எதிரான வன்முறைக்குக் கூட்டுப் பதிலிறுப்பாக அமைந்த பகுதி ஆறு நிசப்த இரைச்சல் என்ற தலைப்பைக் கொண்டமைந்தது. அதில் சரளா இமானுவல் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கெதிராக பாலியல் வன்முறையை எதிர்கொள்ளல் பற்றி ஒரு பிடி அன்பு என்ற கட்டுரையை எழுதியிருந்தார்.

இரண்டு பின்னிணைப்புகள் சேர்க்கப்பட்டிருந்தன. முதலாவது, இலங்கையில் பெண்களுக்கு எதிராக நடக்கும் வன்முறைக்கு எதிராகப் போராடுவது போராட்டங்களுக்கும் தண்டனையிலிருந்து தப்பித்தல் - ஒரு காலக் கோடு என்ற தலைப்பில் சர்வதேச மற்றும் தேசிய கொள்கைகளும் சட்ட முன்னேற்றங்களும் பதிவிடப்பட்டிருந்தன. இரண்டாவது, இலங்கையில் தண்டனையிலிருந்து தப்பித்தலும் பெண்களுக்கு எதிரான வன்முறைக்குப் பொறுப்புக்கூறலுமாக அமைந்தன.ஒருமித்த ஆதரவையும் சகோதரித்துவத்தை
யும் முன்வைத்து வாருங்கள் தோழியரே வையகத்தை வெற்றி கொள்ள என்று அழைக்கிறது பகுதி ஏழு.அதில் முதல் கட்டுரையை சித்ரலேகா மௌனகுரு எழுதியிருக்கிறார். கிழக்குப் பிராந்தியப் பெண்கள் நிறுவனங்களின் கூட்டமைப்பு உருவான விதம், அதன் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்ட பாங்கு, அதில் இணைந்திருந்த நிறுவனங்கள், அதன் தற்போதைய நிலை எனச் செல்லும் அக்கட்டுரை ஒரு போதும் தனித்தல்ல என்று பறை சாற்றி நிற்கிறது. அதனைத் தொடர்ந்து அனர்த்த முகாமைத்துவப் பெண்கள் கூட்டமைப்பு குறித்து சாத்தியமாகும் எண்ணக்கருக்கள் என்ற தலைப்பில் சரளா இமானுவல் ஒரு கட்டுரையை எழுதியிருந்தார்.

சூரியாவின் செயற்பாடுகளில் தமிழ் முஸ்லிம் பெண்கள் எவ்வாறான பங்களிப்புகளைச் செய்தனர், இன ரீதியான பதற்றநிலைகளை முஸ்லிம் பெண்கள் எவ்வாறு சுமுகமான நிலைக்குக் கொண்டுவர முயன்றார்கள் மற்றும் தமிழ் முஸ்லிம் பெண்கள் இனம் கடந்து எவ்விதத்தில் ஒன்று பட்டு நின்றனர் என்பன குறித்த அனுபவப்பகிர்வை சித்ரலேகா மௌனகுரு இரு முஸ்லிம் பெண்களை முன்னிலைப்படுத்தி ஒரு கட்டுரை எழுதி அதற்கு தமிழ் முஸ்லிம் சகோதரித்துவத்தின் இழைகளாக இரு பெண்கள் எனத் தலைப்பிட்டிருந்தார்.

இரண்டு தலைமுறையைச் சேர்ந்த கமலா வாசுகி மற்றும் அனுராதா இராஜரெட்ணம் ஆகிய பெண்நிலைச் செயல்வாதிகளின் சம்பாஷணை மூலம் ஒழுங்கமைத்தலின் சவால்கள் பகிரப்பட்டிருந்தன. தெருவிலா அல்லது இணையத்தளத்திலா? என்ற கேள்வியை முன் வைத்து நகரும் இப்பகுதி இரு பக்கத்திலும் தம் செயற்றிட்ட ஒழுங்குகளை வெற்றி கொள்ளச் செய்யலாம் ஒன்ற வகையில் முடிகிறது மகிழ்ச்சி.

2016 இல் எவரெஸ்ட் சிகரத்தைத் தொட்ட இலங்கையின் முதல் பெண்ணான ஜெயந்தி குரு உதும்பால தனது அனுபவத்தை மலைகளின் உயரத்தை நாடுவோம் என்ற ரீதியில் சொல்லிச் செல்கிறார்.

இத்தொகுப்பின் வெற்றிக்குக் காரணமாக அமைந்த இருபத்தைந்து வருட நினைவுகளையும் பகுதி எட்டு உள்ளடக்கியுள்ளது. காலத்தை கையகப்படுத்தல் என்ற வகையில் 1991 தொடக்கம் 2016 வரையில் இலங்கைப் பெண்களின் செயல்வாதத் தருணங்களை சுருக்கமாக தொகுத்து வழங்கியிருக்கிறார்கள் சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தினர்.

இறுதிப் பகுதி மிக முக்கியமானதும். சூரியா பெண்களிடம் எதிர்பார்த்த மாற்றங்களும் அதன் வெளிப்பாடுகளுமாகும். எமது வெளிகள் ,எமது பலம் நாங்கள் நாங்களாகவே ஒன்று சேர்கிறோம் என்று ஏக மனதாய் சந்தோசம் கொண்டாடும் பெண்களை புகைப்படங்கள் சில காட்சிப்படுத்தி நிற்கின்றன. பெண்கள் தங்கள் மன அழுத்தங்களுக்கு வடிகால்கள் போன்றமைந்த ஒரு இடத்தை கண்டடைந்து தம் எண்ணங்கள் கருத்துக்கள் செவி சாய்க்கப்படுவதை உணரும் தருணத்தில் மனம் இலேசாகி மகிழ்ச்சி பொங்கிப் பிரவாகித்து வெளிப்படும். இதையே சூரியா இந்த இருபத்தைந்து வருடங்களாக செய்து வருகிறது. சுயநலமற்ற அதன் சேவை மேன்மேலும் தொடர வேண்டும். பல பெண்கள் சூரியாவால் விழித்தெழ வேண்டும் என்பதே பெண்ணாகிய ஒவ்வொருவரினதும் அவா என்றால் அது மிகையாகாது. சூரியாவில் சேவை செய்யும் அனைத்துப் பெண்களுக்கும் வாழ்த்துக்கள்.

தொடர்ச்சி...

## திருகோணமலை பத்திரகாளி அம்மன் உற்சவம்

சமுத்திரா தீர்த்தோற்சவம் நடைபெற்றது.

அம்பாள் ஆலயத்தில் இருந்து அதிகாலை 5.00 மணிக்கு எழுந்தருளி வித்தியாலயம் வீதி, வித்தியாலயம் ஒழுங்கை, பிரதான வீதி, கடற்படைத்தள வீதி. கோணேசர் ஆலய வீதி வழியாக உயர்ந்தபாடு கடற்கரையை சென்றடைந்து, அங்கு தீர்த்தம் ஆடினார்.

பெருமளவிலான அடியவர்கள் இன பேதம் இன்றி இவ் உற்சவத்தில் கலந்து கொண்டனர். கடலில் படகுகள் மூலமும் அடியவர்கள் தூர இடத்தில் இருந்து வந்து இந்த உற்சவத்தில் பங்கேற்றனர்.

# அறிவோம் – தெளிவோம் – பகிர்வோம் – 28

## க.பொ.த. (உ/த) – புதிய பாடத்திட்டம் – தமிழ்

- மட்டுநகர் யுவன் -

சென்ற வாரங்களில் வினாத்தாள் I (தமிழ் I), வினாத்தாள் II (தமிழ் II) ஆகியவற்றில் வரும் கட்டாய வினாக்களுக்கான மாதிரி வினாக்களைப் பார்த்தோம். இவ்வாரத்திலிருந்து ஏனைய வினாக்கள் தொடர்பாகக் கவனம் செலுத்துவோம். இங்கு தரப்பட்டுள்ள வினா, வினாத்தாள் II (தமிழ் II) இல் உள்ள பகுதி IIஇல் எட்டாவதாக வரும் வினாவாகும். இது, மாதிரிவினா என்பதைக் கவனத்திற்கொள்க.

8. (அ) (i) பின்வரும் வாக்கியத்திலுள்ள பொருள் மயக்கத்தை இனங்கண்டு எழுதுக.
மன்னாரில் மோசமான ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகிறது.
(ii) பின்வரும் வாக்கியத்திலுள்ள வழுவைச் சுட்டிக்காட்டி, வழுவற்ற முறையில் வாக்கியத்தைத் திருத்தி எழுதுக.
கண்ணனும் நாயும் வந்தார்கள்.
(iii) பின்வரும் வாக்கியங்களை இணைத்து ஒரே வாக்கியமாக எழுதுக.
அம்மா கோயிலுக்குப் போனாள். அக்கா கோயிலுக்குப் போனாள்.
இருவரும் கடவுளை வணங்கினர். வீட்டுக்கு வந்தார்கள்.
(iv) பின்வரும் வாக்கியத்தைச் செயப்பாட்டுவினை வாக்கியமாக மாற்றி எழுதுக.
பாரதியாரின் கவிதைகளைப் பலர் முன்மாதிரியாகக் கொண்டுள்ளனர்.
(v) பின்வரும் வாக்கியங்களை அவை இருக்கும் ஒழுங்கிலே பொருத்தமான இணைப்பிடைச் சொற்களைக் கொண்டு இணைக்குக.
கட்டுரை எழுதுவதற்கு மொழிவளம் மிக இன்றியமையாததாகும்.
அதை வளமாக்கிக்கொள்வது அவசியமானதாகும்.
சிறந்த கட்டுரையை எழுதுவதில் சிக்கல் தோன்றும்.
(10 புள்ளிகள்)

(ஆ) பின்வருவனவற்றுள் ஏதேனும் ***ஒன்றைப்பற்றிச்*** சிறு குறிப்பு எழுதுக.

(i) உயிர்த்தொடர்க் குற்றியலுகரம்
(ii) பண்புத்தொகை
(iii) எதிர்மறை வினையெச்சம்

(5 புள்ளிகள்)
(10 + 05 = 15 புள்ளிகள்)

பயிற்சிக்காக மேலும் ஒரு வினா தரப்பட்டுள்ளது.

8. (அ) (i) பின்வரும் வாக்கியத்திலுள்ள பொருள் மயக்கத்தை இனங்கண்டு எழுதுக.
மோசமாக்கப்பட்ட மட்டக்களப்பின் வீடுகள் இன்னும் புனரமைப்புச் செய்யப்படவில்லை.
(ii) பின்வரும் வாக்கியத்திலுள்ள வழுவைச் சுட்டிக்காட்டி, வழுவற்ற முறையில் வாக்கியத்தைத் திருத்தி எழுதுக.
சென்னையில் முக்கிய நபர் கைதுசெய்யப்பட்டார்
(iii) பின்வரும் வாக்கியங்களை இணைத்து ஒரே வாக்கியமாக எழுதுக.
ஆசிரியர் வகுப்பறைக்குள் வந்தார். மாணவர்கள் எழுந்தார்கள். வணக்கம் சொன்னார்கள்.
(iv) பின்வரும் வாக்கியத்தைச் செய்வினை வாக்கியமாக மாற்றி எழுதுக.
வாக்கியங்கள் பிழையாக எழுதப்படுகின்றன.
(v) பின்வரும் வாக்கியங்களை அவை இருக்கும் ஒழுங்கிலே பொருத்தமான இணைப்பிடைச் சொற்களைக் கொண்டு இணைக்குக.
அவன் கவிதையை நன்றாக எழுதியுள்ளான்.
அவனுக்கு ஆறுதல்பரிசுகூடக் கிடைக்கவில்லை.
அவன் கவிதை எழுதுவதைக் கைவிடவில்லை.
(10 புள்ளிகள்)

(ஆ) பின்வருவனவற்றுள் ஏதேனும் ***ஒன்றைப்பற்றிச்*** சிறு குறிப்பு எழுதுக.

(i) இடைநிலை மெய்ம்மயக்கம்
(ii) வினைத்தொகை
(iii) ஈறுகெட்ட எதிர்மறை வினையெச்சம்

(5 புள்ளிகள்)
(10 + 05 = 15 புள்ளிகள்)

## நம்பிக் கை வை

*-திரு. சிவலிங்கம்-*



ஆடவந்த மேடைதானே இந்த உலகம் - நன்றாய்
ஆடுமட்டும் ஆடிவிட்டு தூங்கு தினமும்
ஓடுமட்டும் ஓடிப்பாரு நாளும் பொழுதும் - ஒன்றாய்
ஒற்றுமையாய் வாழ்ந்துபாரு பேசும் உலகம்

கூடவந்த சொந்தமோடு வாழு தினமும் - குற்றம்
குறையிருந்தால் ஆதரித்துப் பேசு குறையும்
தேடுசெல்வம் காசுபணம் காணாமற் போகும் - சுற்றம்
தானே முற்றும்கூட வரும்யோசி விளங்கும்

எண்ணந்தன்னில் திண்மைகொள்ளு எல்லாம் பலிக்கும் - என்றும்
ஏற்றம்தானே வாழ்வுதன்னில் நம்பு ஜெயிக்கும்
கன்னம்தன்னில் கையைவைத்தால் எல்லாம் வெறுக்கும் - சின்னக்
கன்றுமுட்ட முட்டத்தானே பாலுஞ் சுரக்கும்


வீழும்போதே தாங்கும் கைகள் நம்பிக்கைதானே – உந்தன்
வாழ்வில் என்றும் கூடவரும் எண்ணுமெய்தானே
பாழும்சோகம் யாருக்கில்லை பாரு கண்ணாலே – பாரில்
பார்த்தபின்பும் உந்தன்கவலை வருமோ பின்னாலே

# கற்போம்

## உயிர் அங்கிகளின் மூலக உள்ளடக்கம்

குணம் சவரிராஜா 02 தொடர்ச்சி...

46. பொஸ்போஇலிப்பிட்டுகளின் கட்டமைப்பை விபரிக்க.



- பொஸ்போலிப்பிட்டுகள் கலமென்சவ்வுகளின் பிரதான கூறுகள் ஆகும்.
- அவை இரண்டு கொழுப்பமிலங்களையும் ஒரு கிளிசரோல் மூலக்கூறுடன் தொடுக்கப்பட்ட ஒரு பொஸ்பேற்றுக்கூட்டத்தையும் கொண்டன.
- பொஸ்பேற்றுக்கூட்டம் பொஸ்போலிப்பிட்டு மூலக்கூறுக்கு மறை மின்னேற்றத்தைக் கொடுக்கிறது.
- வகைமாதிரியாக ஒரு மேலதிக முனைவுக்குரிய மூலக்கூறு அல்லது சிறிய ஏற்றம் பெற்ற மூலக்கூறும் பொஸ்பேற்றுக் கூட்டத்துடன் தொடுக்கப்பட்டிருக்கும். உ-ம். கோலின்
- பொஸ்போலிப்பிட்டுக்களின் இரு அந்தங்களும் வெவ்வேறான நடத்தைகளைக் காண்பிக்கின்றன.
- ஐதரோக்காபன் வால்கள் நீர்வெறுப்புக்குரியன.
- அதேவேளை பொஸ்பேற்றுக்கூட்டமும் அதன் இணைப்பும் (தலை) நீர்நாட்டமுடையன.


47. உயிரங்கிகளில் இலிப்பிட்டுக்களினால் மேற்கொள்ளப்படும் நான்கு தொழில்களைக் குறிப்பிடுக.

இலிப்பிட்டுக்களின் தொழில்கள்

- சக்தி மூலமாக உணவுச்சேமிப்பு.
(கொழுப்புக்களும் எண்ணெய்களும் போன்ற திரைகிளிசரைட்டுகள்)
- முதலுருமென்சவ்வின் பாயித்தன்மையைப் பேணல்
(பொஸ்போலிப்பிட்டுகள், கொலஸ்திரோல்)
- உடல்பூராவும் பயணிக்கும் சமிக்ஞை காட்டும் மூலக்கூறுகளாகத் தொழிற்படுகின்றன. (ஓமோன்கள்)
- விலங்குக் கலமென்சவ்வின் கூறுகளாகக் காணப்படுகின்றன. (கொலஸ்திரோல்)

48. புரதங்களை ஆக்கும் அடிப்படை அலகுகளைக் குறிப்பிட்டு, அவ்வலகுகளின் கட்டமைப்பை விபரிக்க.

- புரதங்கள் அமினோவமிலங்களால் ஆக்கப்பட்டவை.
- புரதங்களின் உருவாக்கத்தில் இருபது வெவ்வேறு அமினோவமிலங்கள் சம்பந்தப்பட்டுள்ளன.
- மூலக உள்ளடக்கம் C.H.O.N மற்றும் S ஆகும்.
- (கிளைசீனைத் தவிர) ,அமினோவமிலத்தின் மையத்தில், ஓர் சமச்சீரற்ற காபன் அணு உள்ளது.
- ஒவ்வொரு அமினோ அமிலமும், ஒரு அமினோ கூட்டம், ஒரு காபொக்சில் கூட்டம், ஒரு ஐதரசன் அணு மற்றும் R இனால் குறிப்பிடுத்தப்பட்டுக் காணப்படும் மாறுபடக்கூடிய ஒரு கூட்டம் ஆகியவற்றினால் ஆக்கப்பட்டது.
- R ஒரு அல்கைல் கூட்டமாகும்.
- கிளைசீனைப் பொறுத்தமட்டில் R ஆனது H, அணுவினால் மாற்றீடுசெய்யப்பட்டிருக்கும்.
- 'பக்கச்சங்கிலி' எனவும் அழைக்கப்படும் R கூட்டம் ஒவ்வொரு அமினோவமிலத்துடனும் வேறுபடும் அதேவேளை, ஏனைய கூட்டங்கள் 'முதுகு எலும்பில்' (H அணு அடங்கலாக) அமைந்திருக்கும்.



அமினோவமில மூலக்கூறின் கட்டமைப்பு

- அமினோஅமிலங்கள் ஒன்று அல்லது பல காபொட்சில் கூட்டங்களையும் அமினோ கூட்டங்களையும் கொண்டிருக்கலாம்.
- அமைனோ கூட்டம் காரத்தன்மையை உடையது.
- காபொக்சில் கூட்டம் அமிலத்தன்மையை உடையது.
- இரு இயல்புகளுமே ஒரு மூலக்கூறில் காணப்படும்போது அவை அம்போடெறிக் (amphoteric) மூலக்கூறுகள் என அழைக்கப்படும். ஆகவே அமினோவமிலங்கள் அம்போடெறிக் மூலக்கூறு களாகும்.
- இரண்டிலும் இருந்து ஒரு நீர் மூலக்கூறு அகற்றப்படுதலால் இரண்டு அமினோவமிலங்கள் ஒடுக்கற் தாக்கத்தை மேற்கொள்ளுகின்றன. இதன் பேறாக பெப்தைட்டு பிணைப்பு எனப்படும் ஓர் பிணைப்பு உருவாகின்றது.

பக்க அனுசரணை
NCL
NELSON COLLEGE LONDON
IN PARTNERSHIP WITH
LONDON METROPOLITAN UNIVERSITY



தொடர்ச்சி...

## டானிஸ் தேசாந்திரியின் பயணக் குறிப்பில் கிழக்கிலங்கை

கிணறுகள் வற்றிப்போகும் காலமாகும்.

அதேநேரம் இறுக்கமான மேலைத்தேய ஆடைகளைகளையும் சம்பாத்துக்களையும் அணிந்து கொண்டு கானல் நீர் தென்படும் உலர்ந்த வெளிகளிலும் இலங்கையின் காட்டு கிராமங்களினூடாக பயணப்படுவது இவர்களுக்கு அந்நியமானதாயிருந்தாலும், அரச குடும்பத்து துப்பாக்கி வீரர்களாயிருந்தமை கடுமையான சூழல்களில் இவர்களுக்கு தாக்குப்பிடிக்கும் வலிமையை வழங்கியிருக்கலாம். என்று புரொஹியர் கருத்து தெரிவிக்கிறார்.

இந்த பயணக்குறிப்புகளிலிருந்து அன்றிலிருந்தே இலங்கையின் அரசியர் இராஜதந்திர முக்கியத்துவமிக்க கேந்திர நிலையமாகவும் சுயாட்சி பிராந்தியமாகவும் கிழக்கிலங்கையின் சம்மாந்துறை துறைமுகம் பயன்பட்டுள்ளமையினையும், அக்கால பிராந்திய வழக்காறுகளையும், அறிந்து கொள்ள முடிகின்றது. இவைபோன்று இன்னும் மொழிபெயர்க்கப்படாத பல டச்சு, அரபு, அர்வி மொழி ஆவணங்களும் நூதனசாலைகளில் உறங்கிக் கிடக்கின்றன. இவற்றை ஆராயந்தளிக்வேண்டிய கடப்பாடு அனைவருக்கும் இருக்கின்றது.

தொடர்ச்சி...

## ஐநா ஆணையாளரின் அறிக்கையில் தமிழ் மக்கள் என்ற வார்த்தையில்லை...

போன்ற நாடுகள் இலங்கை அரசாங்கம் மனித உரிமைச் சபையின் தீர்மானத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என வலியுறுத்தியுள்ளன.

இதேவேளை, ஆணையாளர் மிச்செல் பச்சலெட் இலங்கை தொடர்பாக வெளியிட்ட அறிக்கையில் தமிழ் மக்கள் என்றோ, வடக்கு-கிழக்கு மாகாணம் என்றோ எந்தவொரு வார்த்தைகளும் பயன்படுத்தப்படவில்லை.

மாறாக இலங்கை மக்கள் என்றே ஆணையாளரின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. எனவே தமிழ் சிங்கள மக்களின் இனப்பிரச்சினையாகக் காண்பிக்காமல், இலங்கை மக்களின் மனித உரிமைப் பிரச்சினையாக மாத்திரமே ஜெனீவா மனித உரிமைச் சபை காண்பிக்க முற்பட்டுள்ளதாக ஜெனீவாவில் உள்ள தமிழ்ப் பிரதிநிதியொருவர் கூறியுள்ளார்.

எவ்வாறாயினும் இலங்கை தொடர்பாக பிரித்தானியா சமர்ப்பிக்கவுள்ள பிரேரணை ஜெனீவா மனித உரிமைச் சபையின் தீர்மானமாக நேற்று வியாழக்கிழமை நிறைவேற்றப்படவிருந்தது. ஆனாலும் அந்தத் தீர்மானம் குறித்து அலட்டிக்கொள்ள வேண்டிய அவசியம் இல்லையென்றும் மேலும் இரண்டு வருடகால அவகாசம் வழங்கப்பட்டுள்ளமை கூட அவசியம் அற்றதெனவும் இலங்கை அரசாங்கம் கூறியுள்ளது.

மனித உரிமைச் சபையின் தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்கியுள்ளமை கூட அரசாங்கத்தின் மனித உரிமைச் செயற்பாட்டின் முன்னேற்றத்தின் அடிப்படையில்தான் என்று அமைச்சர் மகிந்த சமரசிங்க கூறியுள்ளார்.

தொடர்ச்சி...

## பாடசாலையில் கற்றலுக்கான தகவல் வள் நிலையமும்; அதன் அவசியமும்

விளைவினை மேம்படுத்துவற்கான செயற்பாடாகத்தான் இருக்க முடிகிறது. இத்தகைய நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக ஆசிரிய நூலகர் கற்றல் வளங்களை ஒழுங்கமைத்து அவற்றை திறமையாக பயன்படுத்துவதற்கு உதவுவதிலும் அவரின் ஆற்றல் வளமுகாமைத்துவம் இணைந்த திட்டமிடல், கற்பித்தல் போன்ற செயல்வழிகளிலே அமையும் மாணவர்களின் கற்றலின் தேவைகளை இனங்கண்டு அவற்றுக்கு தேவையான வளச்சாதனங்களை அடையாளப்படுத்தி அவற்றை மாணவர்களும் ஆசிரியர்களும் பயன்படுத்தக் கூடிய தந்திரோபாயங்களை திட்டமிடுதல் அவசியமாகும்.

தகவல் சேகரிப்பு திறன்களை மாணவர்களுக்கு ஏற்படுத்துவதற்காக தகவல் மையங்களை இனங்காணக்கூடிய செயல்திட்டத்தினை வளநிலையத்தில் செயற்படுத்த வேண்டும். பாடத்திட்டத்திற்குள்ளும் அதற்கு அப்பாலும் செயற்படுத்தக் கூடிய தந்திரோபாயத்தினை நடைமுறைப்படுத்தி பாடரீதியாக மாணவர்கள் எவ்வாறான வளங்களை பெற்றுக் கொள்ள வேண்டுமென்ற ஆற்றலையும், தேடல் திறன் போன்ற நுட்பங்களையும் பாட ஆசிரியருடன் இணைந்து ஆசிரிய நூலகர் செயற்படுத்தல் வேண்டும்.

பலதரப்பட்ட பாட பரப்புகளிலே உருவாக்கப்பட்ட இணைந்து திட்டமிட்ட பாடச் செயற்பாடுகள் மூலம் மாணவர்களின் தகவல் திறன், செயற்பாட்டுத்திறன் என்பவற்றை வளர்க்க முடியும். எனவேதான் கற்றலுக்கான தகவல் வள நிலையங்கள் பாடசாலைக் கல்விச் செயற்பாட்டு, திட்டச்செயற்பாட்டு ஒழுங்கு நடைமுறையில் முக்கிய பங்கினை வகிக்கின்றது.

கற்றல் சமூகத்தினை எதிர்காலத்திற்காக வளர்த்தெடுக்க வேண்டிய பொறுப்பும், கடப்பாடும் பாடசாலைகளுக்கு உண்டு. வாழ்கின்ற சமூகம் ஒன்று கற்கின்ற சமூகமாக இருக்கின்ற போது தான் அது ஆரோக்கியமான புறச் சூழலை ஏற்படுத்தும். இத்தகைய பின்புலத்தில் தான் மாணவர்களின் கற்றல் பயில்நெறி செம்மையுருவாக்கம் பெற முடியும். அத்தகைய செயலுருவாக்கத்துக்கு துணைபுரிவது பாடசாலைகள் மட்டுமேயாகும்.

ஆகவே பாடசாலையின் உள்ளகக் கற்றல் செயல்பாட்டிற்கு மிகவும் துணைபுரிவது கற்றல் வளநிலையங்களாக இயங்கக்கூடிய நூலகங்களே. பாடசாலையினதும், பாடத்திட்டத்தினதும் செயல்திட்ட வரையிறுப்புக்களை ஒழுங்கமைப்பதில் அதிபர், ஆசிரியர்களுடன் இணைந்து பணியாற்றக் கூடிய திட்ட நுட்பம் ஒரு ஆசிரிய நூலகரிடம் எதிர்பார்க்கப்படுகின்ற பண்பாகும். எனவேதான் ஆசிரியர் நூலகர் ஒருவருக்கு பிரிவுத் தலைவர் அந்தஸ்து வழங்கப்படுகிறது. ஏனைய ஆசிரியர்களுடன் பாடவிதான திட்டமிடலிலும் அவர்கள் பங்கு கொள்ளவேண்டும். இதனால் அவர்கள் நூலக தகவல் திறமைகளை வகுப்பறைக் கற்றலுடன் ஒருங்கிணைப்பதற்கு பாடசாலை நூலக கற்றல் நிலையத்தின் சேவையை திட்டமிட்டு அபிவிருத்தி செய்ய முடியும்.

தொடர்ச்சி...

## ஐ.நாவே எமக்கான நீதி எங்கே? மட்டக்களப்பில் ஓரணியில் திரண்ட மக்கள்...

ஒன்றையும் அவர்கள் அனுப்பி வைத்துள்ளனர்.

'வடகிழக்கு மாகாணத்தில் தமிழ் ஒட்டுக் குழுக்களுடன் சேர்ந்து இலங்கை பாதுகாப்புப் படையினரும் இராணுவ உளவுத் துறையினரும் முப்பதாண்டுக்கு மேலாய் தமிழ் மக்களை கடத்திக் கொண்டுபோய்க் காணாமற் போகச் செய்தனர்' என்ற குற்றச்சாட்டுக்களை முன்வைத்து, வடகிழக்கு காணாமல் போன உறவுகளின் அமைப்புக்களினால் ஐக்கியநாடுகள் மனித உரிமைகள் உயர் ஆணையாளர் மிசேல் பசலே அவர்களுக்கு அறிக்கை ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

குறித்த அறிக்கையில் பின்வரும் விடயங்கள் முதன்மைப் படுத்தப்பட்டுள்ளது. சிறிலங்காவில் குழந்தைகள் உட்பட ஆயிரக்கணக்கான தமிழர்கள் கானாமற்போயினர். சிறிலங்காவின் இராணுவ உளவுத்துறை ஏவி விடும் அச்சுறுத்தலையும் தாக்குதலையும் மீறிப் பல்லாண்டு காலமாய் எங்கள் அன்புக்குரியவர்களைத் தேடியலைகின்றோம்.

அன்னையர் தம் அன்பிற்குரியவர்களைத் தேடிச் சென்ற போது பாதுகாப்புப் படையினரும் ஒட்டுக்குழுவினரும் அவர்களைத் தாக்கி பாலியல் வல்லுறவுக்கு ஆளாக்கினர். படையினருடன் சேர்ந்து வேலை செய்யும் தனியாட்களும் உள்ளனர். இவர்கள் காணாமற்போனவர்களின் குடும்பத்தினரைப் போய்ப் பார்த்து காசு கொடுத்தால் காணாமற்போனவர்களைக் கண்டுபிடித்துக் கொடுப்பதாக வாக்களிக்கின்றனர். பல நேரம் அவர்களைத் தனியிடத்துக்குக் கூட்டிச் சென்று அங்கே இராணுவத்தினரும் ஒட்டுக்குழுவினரும் இந்தப் பாவப்பட்ட அன்னையரைச் சீரழித்து விடுகின்றனர். காணாமற்போனவர்களின் அன்னையரும் குடும்பத்தினரும் ஆண்டுக்கணக்காக இந்த அவலத்துக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

காணாமற் செய்தமைக்குப் பொறுப்பானவர்களைத் தண்டிக்க வேண்டிய அரசு அவர்களுக்கு ஏற்றம் தந்து வெவ்வேறு நாடுகளுக்கும் ஐநாவுக்கும் அவர்களைத் தூதியல் பணியில் அனுப்பி வைத்தது.

அவர்கள் உயிரோடிருக்கிறார்களா?

எங்கள் குழந்தைகள் என்ன ஆனார்கள்?

எங்கள் புதல்வியர் பாலியல் வல்லுறவுக்கு ஆளாக்கப்பட்டனரா?

அவர்களைச் சித்திரவதை செய்து கொண்டிருக்கின்றனரா?

காணாமற்போன எங்கள் அன்பிற்குரியவர்களின் விடுதலையைப் பெற்றுத்தர உங்கள் பொறுப்பைப் பயன்படுத்துமாறும் பாதுகாப்புப் படையினரும் ஒட்டுக்குழுவினரும் பன்னாட்டு நீதிக்கு முன்னிற்கும்படி செய்யுமாறும் உங்களை வேண்டுகிறோம்.

எங்கள் பணிவான வேண்டுகோள் :

1) சிறிலங்கா விரிக்கும் "உண்மையும் மீளிணக்கமும்" போன்ற வலையில் விழுந்து விடாதீர்கள் சிறிலங்காவுக்கு எவ்விதக் கூடுதல் கால அவகாசமும் கொடுத்து விடாதீர்கள். கால நீட்டிப்புத் தருவது தமிழ்ப் பகுதிகளில் நிறுத்தப்பட்டுள்ள சிறிலங்கா பாதுகாப்புப் படைகள் தங்கள் உரிமைமீறல்களைத் தொடர்ந்து செய்யவும் முக்கியமான போர்க்குற்ற சான்றுகளை அழிப்பதற்கும் உதவுவதாகி விடும். மேலும் கூடுதல் கால அவகாசம் கொடுப்பது தமிழர்களுக்கு நிரந்தரமாக நீதியை மறுப்பதாகி விடும்.

2) சிறிலங்காவை அனைத்துலகக் குற்றவியல் நீதிமன்றத்தின் அல்லது சிறிலங்காவுக்கென்றே அமைக்கப்படும் சிறப்புப் பன்னாட்டுக் குற்றத் தீர்ப்பாயத்தின் பார்வைக்கு அனுப்புங்கள்.

3) போரினால் பாதிப்புற்றவர்களின் துயரம் குறித்தும் மனிதவுரிமை மனித நேயம் தொடர்பிலான மற்ற சிக்கல்கள் குறித்தும் கண்காணித்து ஆறு மாதத்துக்கொரு முறை மனிதவுரிமைப் பேரவைக்கு அறிக்கை அளிப்பதற்கென சிறிலங்காவுக்கான சிறப்பு அறிக்கையாளரை அமர்த்துங்கள்.

இவ்வாறு அவர்களின் அறிக்கையில் கூறப்பட்டிருந்தது.

தொடர்ச்சி...

## சுராங்கனிட்ட மாலு கெனாவா

சிங்கள நண்பியின் பெயர், உமையாங்கனா. இன்னொருத்தியின் பெயர் அதே சுராங்கனி. மரபு!

ஆம். எத்தனை பேர் கவனித்தீர்கள்? ஒரு விடயத்தை நான் சொல்லவே இல்லை. சுராங்கனியின் ஏழு பிள்ளைகளில் பூப்பறிக்கப் போன மூத்த மகன் எங்கே?

அவன் தான் மூத்த தலைவன். அண்ணாவை சிங்களத்தில் 'ஐயா' என்பார்கள். எனவே மூத்ததலைவனின் சிங்களப்பெயர் ஐயநாயகன். வேறு யார்? சிவனுக்கும் மோகினிக்கும் மகனான சாட்சாத் நம் ஐயனாரே தான்!

சில இடங்களில் ஈஸ்வரனும் சுராங்கனியும் சந்திப்பதற்கு முன், சைவ - வைணவப்புராணங்களில் கூறப்படும் பஸ்மாசுரன் கதை, முற்சேர்க்கையாக வருகின்றது. அவற்றில் ஒரு சில கதைகளில் சுராங்கனிக்கு ஐயநாயகன் மட்டுமே பிறக்கிறார். பெருங்கருணை கொண்டவளான சுராங்கனி, அதன் பின் குழந்தைகளைக் காக்கும் "கிரி அம்மா" (கிரி = பால்) எனும் தெய்வம் ஆகின்றாள்.

சிங்கள மரபில் சில இடங்களில் பத்தினிக்குச் சமனாகவும், சில இடங்களில் பத்தினியை விட மேம்பட்டவளாகவும், 'கிரி அம்மா' எனும் தெய்வம் வழிபடப்படுவது இங்கு நினைவுகூரத்தக்கது. கிரி அம்மா என்று ஒன்றுக்கு மேற்பட்டவர்களை அழைக்கும் வழக்கமும் சிங்கள நாட்டார் மரபிலுண்டு.

இலங்கையில் பத்தினி வழிபாட்டோடு இணைந்தாற்போலவே ஐயனாரும் வழிபடப்படுகிறார். பத்தினிக்காக நிகழும் "கம்மடுவ" சடங்கில், கதிர்காமக் கடவுளுக்கான "கால பந்தம" எனும் தீப்பந்தம் ஏற்றும் பூசையின் போது ஈஸ்வர தெவியோ - சுராங்கனியின் கதை சிங்களப்பூசாரியான கப்புறாளையால் பாடப்படுகிறது.

சேரநாட்டுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவு பலராலும் மீண்டும் மீண்டும் சமூகவியல் ஆய்வுகளுக்கான களமாக சுட்டிக்காட்டப்படும் ஒன்று. கேரளத்தை ஆளும் தெய்வங்கள் இரு வகை. பகவதிகளும் சாஸ்தாக்களும். பகவதி உருத்திரிந்த கண்ணகி. சாஸ்தா உருத்திரிந்த சாத்தன், அதாவது நம் ஐயன். சிங்களவரிடம் இன்றும் பத்தினி இருக்கிறாள். கூடவே மருவிப்போனவனாக ஐயநாயகனும் விளங்குகின்றான்.

தமிழ் மரபும் பண்பாடும் எங்கெல்லாம் போய்த் திரும்பி, இன்று எப்படியெல்லாம் உருமாறித் திரிந்து நிற்கின்றன என்று பார்த்தீர்களா?

AGNI Pulayavely

## அக்கினி உணவு தயாரிப்புக்கள்

- சுவையான மரவள்ளிப் பொரியல்
- சுவையான மிக்சர்
- புலையவெளி கிராமத்து மிளகாய்த் தூள்
- கறிவேப்பிலைத் தூள் என்பனவற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள - உடனே முன்கூட்டிய திவை மேற்கொள்ளுங்கள்.

தொடர்புகளுக்கு

தொலைபேசி இலக்கம்:- 0771516203, 0757876853

E-mail:- agnip8367@gmail.com

விலாசம்:- பதுளை வீதி புலையவெளி – செங்கலடி



## அக்கினி தையல் நிலையம்

### பதுளை வீதி, தம்பானம்வெளி

(நாகதம்பிரான் கோவில் அருகில்)

நன்கு பயிற்சிபெற்ற தையல் நிபுணர்களால் குறைந்த விலையில் மிகவும் நேர்த்தியான முறையில் அனைத்து விதமான ஆடைகளும் தைப்பதற்கு நாட வேண்டிய ஒரே இடம் அக்கினி தையல் நிலையம் தம்பானம்வெளி

| | |
|---|---|
| சாறி பிளவுஸ் (சாதாரணம்) | – 250 ரூபாய் |
| பெரியவர் ஆடை (சட்டை) | – 200 ரூபாய் |
| சிறியவர் ஆடை ( சட்டை) | – 100 ரூபாய் |
| சாரம் பொருத்துவதற்கு | – 50 ரூபாய் |
| சல்வார் | – 250 ரூபாய் |
| டொப் | – 150 ரூபாய் |
| நைட் ட்ரஸ் | – 150 ரூபாய் |
| ஸ்கர்ட் பிளவுஸ் | – 200 ரூபாய் |
| சீருடை | – 200 ரூபாய் |
| பேபிப்ரொக் | |



(இது லண்டன் ஈழபதீஸ்வரர் ஆலயத்தின் ஆதரவு மற்றும் நிதியுதவியில் மேற்கொள்ளப்படும் கிராம அபிவிருத்தித் திட்டம்.)

NCL
NELSON COLLEGE LONDON

IN PARTNERSHIP WITH
LONDON METROPOLITAN UNIVERSITY



## Are you 18+ and have GCSEs or work experience?

## Do you have A levels but missed your place at university?

- Foundation Degree Business (London Metropolitan University)
- Foundation Degree Hospitality Management (London Metropolitan University)
- HND Business (Pearson)
- HND Hospitality Management (Pearson)
- BA (Hons.) Final Year- Business (London Metropolitan University)
- BA (Hons.) Final Year- Hospitality Management (London Metropolitan University)

Student Finance Available

Judian Joseph
Mob: 07759802175
Mob: 07453641556

Printed at Express News Papers (Cey) Ltd and Published by Arangam News (Pvt)Ltd No 227 Bar Road Batticaloa